
www.tamilarangam.net

அக்டோபர் 1990
விலை ரூ. 3-00

# நட்புறவு பாலம்

இலக்கிய மாத இதழ்

'OSAI'
5 RUE HERMEL
75018 PARIS
FRANCE



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# எரியும் ஈழத்திலிருந்து இரு கவிதைகள்

கி. பி. அரவிந்தன்

## கைப்பிடிக்குள் உயிர்

பொழுதுபட்ட பின்னாயினும்
வீடு திரும்பலாம்
இருள் வீட்டினுள்ளாயினும்
விளக்கேற்றலாம்
கஞ்சி கால்வயிறாயினும்
மூலைக்குள் முடங்கலாம்
குடில் உள்ளதென்றாயினும்
திருப்தியுறலாம்.

இவை தன்னும்
மிஞ்சாமற் போயிடுமோ?

விளக்கணைத்தல்,
மண்ணினுள் புதைதல்,
பாழ்வெளியை வெறித்தல்,
சிலுவைக் குறியினுள்
அடைக்கலமாதல்,
—நிகழ்வுகளாயிற்று.

நகரம்
இறந்து படுமோ?

மரங்கொடி பச்சைகள்
பொசுங்கிய நாற்றம்,
ஈனக் குரலில் தவிப்பு,
நாய்களின் சிணுங்கல்,
மூச்சிரைக்க நுரைதள்ள
சுருக்குத் தடத்திற்குத்
தப்பியோடுகிறது நாம்பன்.

மழைநீர் வடியும் மதகு
மொக்குகள் கிளைத்த மரம்
பள்ளிக்கூடம்
தேவர்களின் ஆலயம்
சிதறிய கனவுகளின் குவியல்
ஒருமையின் கரையில்
மனித நிரம்பல்.

மனம் பலமுறும்.
கைப் பிடிக்குள் உயிர்.
நழுவியும் போகலாம்,
அதுவாயினும் மிஞ்சலாம்.

(05.07.1990)

## பொழுது

காலைப் பொழுது
வதையுற்றது...

உயர உயர
வட்டமிட்டும்
கரண மிட்டுத்
தாள் வந்தும்
தீயை உமிழ்ந்தன
இயந்திரப் பருந்துகள்...

காற்று வெடிக்க
நிலம் அதிரும்.
குருதி கலைந்து
சில்லிடும் நெஞ்சுக் கூடு
உடலெங்கும்
மின்னணுப் பரம்பல்
சிதறிச் சிதைந்தவை
கண்ணாடிகள் மட்டுமா?

பொதி சுமக்க
மறுத்த மாடென,
ஒலியின் மாகனத்துடன்
காற்று.
திசைகளைத் தின்ற
மயக்கம்.
மேகமூட்டத்துடன்
வானம்.
புகை படிந்த
பகல்.
செவிப்பறையைக்
கிழிக்கும்
இரும்புப் பறவைகள்...

மரங்கள் தலைவிரித்தாட
ஊளையிடும் இலைகள்.
குந்தியிருக்க இடமுமின்றி
பரிதவிக்கும் உயிர்ப் பறவைகள்.

மரத் துண்டமடுக்கி
மணல் மூட்டை
ஏற்றுவர் மனிதர்
இனியும் வரும்
காலைப் பொழுது...

(29.06.1990)

www.tamilarangam.net

பாலம்

இலக்கிய மாத இதழ்
அக்டோபர் 1990

31

ஆசிரியர் :
இரா. திரவியம்

ஆசிரியர் குழு :
சமந்தா
இளம்பிறை
குமார்

தனியிதழ் ரூ. 3.00
ஆண்டுச் சந்தா ரூ. 30.00
அரையாண்டுச்சந்தா ரூ.15.00

தொடர்பு முகவரி:
நிர்வாகி
பாலம்
25, அருணாசலபுரம்
மெயின் ரோடு
அடையாறு சென்னை-20

நிர்வாக ஆசிரியர் :
அதியமான்

## வடகிழக்கு இணைப்பு?

இலங்கைத் தமிழர்களின் பாரம்பரியத் தாயகமாக இலங்கையின் வடக்கு, கிழக்குப் பகுதிகள் விளங்கு கின்றன. இப்பகுதியை நிரந்தரமாக பிரிப்பதற்காகக் காலங்காலமாக சிங்கள இனவெறி ஆட்சியாளர்கள் குடியேற்றத் திட்டங்களையம், பிரித்தாளும் சூழ்ச்சி யையும் கடைப்பிடித்து வருகின்றனர்.

குடியேற்றங்கள் பெரிய அளவில் கிழக்குப் பகுதியில் நடைபெற்று வருகிறது. மணல் ஆறு என்னும் பகுதியை வெலிஓயா என்று பெயர் மாற்றி அப்பகுதி முழுவதையும் சிங்களமயமாக்கி வடக்குப் பகுதிக்கும் கிழக்குப் பகுதிக்கும் இருந்த இணைப்பை, ஏற்கனவே சிங்கள அரசு துண்டித்து விட்டது.

முஸ்லிம்களின் பிரதிநிதிகள் எனப்படுவோர் இலங்கை விடுதலை பெற்றபின், கொழும்புவை மையப் படுத்திய தங்களுடைய வர்த்தக நலன்களைக் காப்பதி லேயேக் குறியாக இருந்தனர். இதனால் அவர்கள் ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி என எவர் ஆட்சிப் பொறுப்புக்கு வந்தாலும் அவர்களைச் சார்ந்து நின்று தங்களுடைய வர்க்க மற்றும் வர்த்தக நலனைப் பேணிக்கொண்டனர். சிங்கள ஆட்சியாளர் கள் முஸ்லிம் மக்களை தமிழ்ப் பேசும் மக்களிடம் இருந்து பிளவுபடுத்தி—பிரித்தாண்டு தங்களுடைய நோக்கங்களை—தமிழர்களுக்கு எதிராக நிறைவேற்றிக் கொண்டபோது முஸ்லீம் (கொழும்புசார்) தலைமை அதற்கு ஆதரவாக இருந்து தன்னுடைய விசுவாசத் தைக் காட்டிக் கொண்டது.

சிங்கள ஆட்சியாளர்கள் என்றுமே வடக்கு கிழக்குப் பகுதியை தமிழர்களின் தாயகமாக ஏற்றுக் கொண்டதில்லை. இந்நிலையில் தமிழர், முஸ்லீம் கட்சியினர் கொழும்புவில் மேற்கொண்ட வடகிழக்கு இணைப்பு பேச்சுவார்த்தை, முஸ்லீம்கள் தங்களுக் கென்று தனி மாகாணம் விரும்பியதால் முறிந்தது என்பது கவலைக்குறியதாகும். முஸ்லீம்கள் கொழும்பு வின் பிரித்தாளும் சூழ்ச்சிக்குப் பலியாகக் கூடாது என விரும்புகிறோம்.

ஊரு இரண்டுபட்டால் கூத்தாடிக்கு கொண் டாட்டம். □

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சோழர் காலத்தில் தமிழும் பௌத்தமும்

சுவீடன் பேராசிரியர் பீட்டர் சல்க்

(தமிழ்நாட்டின் வரலாறு என்பதில் ஏகப்பட்ட ரகசியங்கள் புதைந்து கிடக்கின்றன என்பதில் யாருக்கும் கருத்து வேற்றுமை இருக்க முடியாது. அப்படிப்பட்ட ரகசியங்களில் ஒன்றை நமக்கு இப்போது சொல்ல வருபவர், ஸ்வீடன் நாட்டு உப்சலா பல்கலைக் கழகத்தில் மதங்களின் வரலாறு பற்றிய துறையில் பேராசிரியராகப் பணிபுரியும் பீட்டர் ஷல்க் அவர்கள். சிங்கள—பௌத்த இனவாதக் குழுக்களின் கருத்துருவம் பற்றி இவர் எழுதியிருந்த கட்டுரையை சிங்கள-பௌத்த இனவெறி தீவிரவாதம் என்ற தலைப்பில் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு பொன்னி ஏற்கனவே வெளியிட்டுள்ளது.

பீட்டர் ஷல்க் சிங்களம்-பாலி மொழிகளைப் பயின்றுள்ள அறிஞர். தமிழர்களின் உரிமையை இலங்கை அரசு நசுக்குவதை அறிவுரீதியாக எதிர்த்ததால் இவர் இலங்கைக்குள் நுழைவதை அந்நாட்டு அரசு தடை செய்துள்ளது. இப்படிக் கொழும்பிலிருந்து சென்னைக்கு நாடு கடத்தப்பட்ட அனுபவமும் இவருக்கு உண்டு.

ஏப்ரலில் **பாலத்திற்காக** எடுக்கப்பட்டது —நாகார்ஜுனன்

**சிங்கள-பௌத்தம் பற்றிய தங்கள் ஆராய்ச்சியின் முடிவுகளையும் தங்களுடைய தற்போதய ஆராய்ச்சியின் திசை பற்றியும் கூற முடியுமா?**

1970ஆம் ஆண்டில் சிங்கள—பௌத்தம் பற்றிப் படிக்க ஆரம்பித்தேன். சுமார் பத்து வருடங்கள் படித்திருந்தபோது, 1981-ஆம் ஆண்டு தமிழர்களுக்கு எதிரான கலவரம் நடந்தது. குறிப்பாக, யாழ்ப்பாணப் பொது நூலகம் எரிக்கப்பட்டது என்னைக் கடுமையாக தாக்கிவிட்டது. இதன்பிறகு தமிழ்மொழியையும் தமிழ்க்கலாச்சாரத்தையும் படிக்கத் தலைப்பட்டேன்.

அப்போது எனக்கு ஒன்று தெளிவாகப் புரிந்தது ; இலங்கையில் பௌத்தம் பற்றிய பிரச்சினையானது நான் எதிர்பார்த்தைவிட சிக்கலானது என்பதுதான் அது. மேலும் தமிழ் பௌத்தம் என்ற ஒன்று இலங்கையில் இருந்தது என்பதையும் நான் அறிய நேரிட்டது.

10—12ஆம் நூற்றாண்டுகளில் சோழர்கள் இலங்கையின்மீது படையெடுத்து வந்தபோது இவ்விதமான தமிழ்-பௌத்த மரபு அங்கே இருந்திருந்தது. இந்த தமிழ் - பௌத்தமானது குறிப்பிட்ட சில அம்சங்களைக் கொண்டிருந்தது எனலாம். அதாவது, இந்துசமய அடிப்படைகளைக் கொண்டும், புத்த பகவானை ஏற்றுக் கொண்டும் இது செயல்பட்டது. இறுதியில் சிங்கள-பௌத்தத்துள் இது கலந்துவிடுவதால், இம்மரபை ''இடைக்கால'' தமிழ்-பௌத்தம் என்றும் அழைக்கலாம்.

இன்றைய திரிகோணமலையை அடுத்த கல்வெட்டுகளில் இந்த தமிழ்-பௌத்த மரபு பற்றிய வாசகங்கள் காணப்படுகின்றன. இவை இந்துக் கடவுளர்க்குப் பதிலாக, புத்த பகவானைக் கொண்டு துவங்குகின்றன. புத்த பகவானைத் ''தேவன்'' என்று குறிப்பிடும் வாசகங்களையும் அங்கே காணமுடியும்.

ஆக, இந்த தமிழ் - பௌத்த மரபினர், இந்து அடிப்படைகளைக் கொண்டிருந்தனர். இவர்கள புத்தபகவானை ஏற்றுக்கொண்டாலும் அரசியல்ரீதியாக சோழ அரசர்களையே அண்டியிருந்தனர். எடுத்துக்காட்டாக, இவர்களுடைய பௌத்த—விகாரையின் பெயர் ராஜராஜ பெரும் பள்ளி. ராஜராஜசோழ மன்னனின் பெயரில் இது இருப்பது குறிப்பிடத்தக்கது. இதே பெயரில் தமிழ்நாட்டிலுள்ள நாகப்பட்டினத்தில் ஒரு விகாரை அக்காலத்தில் இருந்துவந்ததும் குறிப்பிடத்தக்கது.

இத் தமிழ் - பௌத்த மரபினை, தற்காலத்திய தமிழ்பேசும் முஸ்லிம் மக்களைப் போலப் பார்க்கலாம். அதாவது, தமக்கே உரித்தான கலாச்சாரத்துடனும் மதமொழியுடனும் இவர்கள் வாழ்ந்துவந்தனர் எனலாம். இப்படிப்பட்ட மரபினர், இலங்கையில் மட்டுமின்றி தமிழ்நாட்டிலும் அக்காலத்தில் இருந்தனர் என்பதும் தெரிய வந்துள்ளது.

கடந்த சில வாரங்களாக, இவை பற்றிய தகவல்களைச் சேகரிப்பதில் நான் ஈடுபட்டு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வருகிறேன். இதற்காகத் தஞ்சாவூரில் தங்கி, கல்வெட்டுகள், சிற்பங்கள் பற்றிய தகவல் விபரங்களைச் சேகரித்தேன். கல்வெட்டுகள் எதிலும் எனக்குத் தேவையான தகவல்கள் காணப்படாத போதிலும், அக்காலத்தைச் சார்ந்த புத்தர் சிலைகளைப் பார்க்க முடிந்தது. குறிப்பாக, தஞ்சை பிரகதீஸ்வரர் கோவிலில் உள்ள மூன்று panel-களில் காணப்படும் புத்தர் சிலைகளைக் கூறுவேன்.

இந்த பௌத்த—மரபு சோழர்காலம்வரை எப்படி நீடித்து வந்தது என்பதும் அதற்குப் பின்பு எப்படி மறைந்து போயிற்று என்பதும் புதிராகவே உள்ளன! ஆறாம் ஏழாம்நூற்றாண்டுகளில் அதாவது தஞ்சைச் சோழர்களுக்கு முந்தைய காலகட்டத்தில்—தமிழ்நாட்டில் பௌத்தம் பரவியிருந்தது என்பது நாமறிந்த ஒன்றுதான். அதற்குப் பின்பு, சைவர்கள் பௌத்தத்துக்கு எதிரான பெரும்போராட்டம் ஒன்றைத் துவக்கிவிட்டனர். இதில் சைவர்கள் வென்றதும் தெரிந்ததுதான். இருப்பினும் இதையும் தாண்டி சில பௌத்தமரபினர் சோழர் காலம்வரை தாக்குப் பிடித்துள்ளனர் என்பதும் தமது எச்சங்களை விட்டுவிட்டுச் சென்றுள்ளனர் என்பதும் தெரிய வந்துள்ளது.

இம்மரபினர் இந்துமதத்தால் உள்வாங்கப் பட்டிருக்கக்கூடும் என்று நினைக்கிறேன். இம்மரபின் அம்சங்களை மீண்டும் கட்டமைத்துப் பார்ப்பதை எனது செயலாக எடுத்துக் கொண்டுள்ளேன்.

எனது ஆராய்ச்சிகளுக்கு உதவியாக இருந்த அறிஞர்கள் பலர், முக்கியமாக, தஞ்சை தமிழ்ப்பல்கலைக் கழகத்தின் நூலக இயக்குனர் டி பத்மநாபன், பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் வ.ஐ. சுப்பிரமணியன் ஆகியோரின் உதவி அளவிடற்கரியது. கல்வெட்டுக்களைப் படிப்பதில் எனக்கிருந்த பிரச்சினைகளை இவ்விருவரும் தீர்த்து வைத்தனர்.

இன்னொரு விஷயத்தையும் இங்கே சொல்லியாக வேண்டியிருக்கிறது; தமிழ் நாட்டின் கலாச்சாரம் இனியும் ''இந்துக்'' கலாச்சாரமாக மட்டும் கருதப் படமுடியாததாகும். இங்கே பலமுகங்கள் கொண்ட சமுதாயம் இருந்திருப்பது தெரிகிறது. இந்து சமயத்தின் கை ஓங்கியிருந்த சோழர்காலத்தின் போதுகூட பௌத்தம் அழித்தொழிக்கப்பட முடியாததாக இருந்திருக்கிறது.

இருந்தாலும் ராஜராஜசோழன், ராஜேந்திரசோழன் ஆகிய மன்னர்கள் பௌத்தம்பற்றிக் கொண்டிருந்த கருத்துக்கள் எனக்குப் புதிராகவே உள்ளன. அவர்கள் பௌத்தத்துக்கு அளித்த மானியத்துக்கான காரண—அடிப்படைகள் யாவை? பௌத்தத்தை இந்துமதத்துள் கொண்டுவருவதற்கு இந்த மானியங்கள் பயன் பட்டனவா? இதுபற்றி எனக்குத் தெளிவாக எதுவும் தெரியவில்லை.

**சிலப்பதிகாரம், மணிமேகலை போன்ற காப்பியங்களும், நாலடியார் போன்ற அறவியல் நூல்களும், சிற்பங்கள் குகைக் கோயில்களும்தான் பெரும் பாலும் தமிழ்நாட்டின் சமண-பௌத்த காலகட்டத்தின் எச்சங்களாக இருக்கின்றன என்று கூற முடியும். இது சோழர்களுக்கு முந்தைய கால கட்டம். சோழர்காலத்தில் பரவியிருந்ததான தமிழ்-பௌத்தத்தை அறிவதற்கான தங்களது ஆதாரங்கள் பற்றி விளக்க முடியுமா ?**

நாகபட்டினம் பௌத்த விகாரைக்கு ராஜராஜ சோழன் அளித்துவந்த மானியம் பற்றிய கல்வெட்டுகளில் அங்கேயிருந்த பௌத்தம் பற்றிய சில விவரங்கள் காணப்படுகின்றன. இலங்கையில் திருகோணமலைக்கு அருகேயுள்ள பெரியங்குளம் என்ற இடத்திலுள்ள வெல்கோம் விகாரையை அடுத்த இடத்தில் நான் கண்ட கல்வெட்டுக்களையும் இங்கே எடுத்துக் கொள்ள முடியும்.

தமிழ்நாட்டில் இன்னும் நிறைய கல்வெட்டுகளைப் பார்த்துவிட முடியும் என்று நம்பியிருந்தேன். ஆனால் அது கைகூடவில்லை. எனினும் தமிழ்நாட்டில் காணப்படும் கல்வெட்டுகளில் மூன்றில் இரண்டு பகுதி கல்வெட்டுகள் மைசூரிலுள்ள கல்வெட்டு ஆராய்ச்சி மையத்தில் பிரசுரிக்கப்பட்டு விட்டன. அங்கே எனக்குத் தேவையான வாசகங்கள் கிடைக்கும் என்று நம்புகிறேன்.

கல்வெட்டுகளில் பௌத்தம் பற்றிய நேரடியான வெளிப்பாட்டு வாசகங்களைக் காண முடிகிறது. ஆனால் இலக்கிய மரபுகளில் இவை மிகைப்படுத்தப்பட்டும், பாண்டித்தியமாக மாற்றப்பட்டும் ஆகிவிடுகின்றன. எனவே கல்வெட்டு வாசகங்கள், மொழிரீதியாகவும் சரி, கருத்துரீதியாகவும் சரி, மக்களுக்கு மிக அருகே வந்துவிடுகின்றன எனலாம்.

இலங்கையைப் பொறுத்தவரை, இந்த தமிழ்-பௌத்தர்கள் சிங்கள பௌத்தத்தால் உள்வாங்கப் பட்டிருக்கலாம் என்றே நினைக்கிறேன். இவர்களிடமிருந்த பல இந்துசமய அடிப்படைகள் சிங்கள-பௌத்தத்திலும் ஏற்றப் பட்டிருப்பதைக்காணும்போது, இது சரி என்றே கூறமுடியும். சிங்கள-பௌத்தத்தில் காணப் படுகிற இந்து-சமய அடிப்படைகளை வைத்துப்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பார்க்கும்போது தமிழ்-பௌத்தம் அதனுள் வாங்கப்பட்டிருக்கும் போக்கு சுவாரசியமிக்க தாக தெரிகிறது.

**தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில் சைவர்களுக்கும் சமண-பௌத்தர்களுக்கும் இடையில் நடந்த பெரும் போராட்டம் பற்றிச் சில விஷயங்கள் தெரிய வருகின்றன. இப்போராட்டம் ஜாதியரீதியானது என்றும், இது வன்முறைமிக்கதாக இருந்தது என்றும் நிச்சயமாகக் கூற முடியும். தங்கள் அராய்ச்சிகளிலிருந்து இதுபற்றி ஏதும் கூறமுடியுமா? சமணமும் பௌத்தமும் சைவத்தால் முழுமையாகத் தோற்கடிக்கப்பட்டிருந் தால், சோழர்காலம் வரை பௌத்தம் என்பது எஞ்சியிருந்திருக்குமா? இது பற்றி தாங்கள் என்ன கூற விரும்பு கிறீர்கள்?**

13-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த கல்வெட்டு ஒன்றை இலங்கையில் பார்க்க முடியும். இதில் ஆந்திரப்பிரதேசத்திலுள்ள அமராவதி பௌத்த விகாரையைப் புதுப்பித்துத் திரும்பக் கட்ட சில பொருட்கள் கப்பல் மூலம் அனுப்பப்பட்ட விவரத்தைப் படிக்க முடிகிறது. இதன்மூலம் தெரிவது என்ன? 13-ஆம் நூற்றாண்டு வரையில் பௌத்தம் இங்கே தென்னிந்தியாவில் தாக்குப் பிடிக்க முடிந்தது; மேலும் இலங்கைக்கும் ஆந்திரத்துக்கும் உறவுகள் தொடர்ந்திருந்தது என்பதுதான் அது.

இதையெல்லாம் வைத்துக்கொண்டு பார்த்தால், தென்னிந்தியாவில் அப்போதிருந்த பௌத்தர்களுக்கு கடல்கடந்த நாடுகள், பிரதேசங்களிலிருந்து ஆதரவு இருந்தது என்று வைத்துக் கொள்ள முடியும். இப்படிப்பட்ட நாடுகளில் இலங்கை தலையாயதாக இருந்திருக்கவும் கூடும். ஆதரவு இல்லாவிட்டால் பௌத்தர்கள் தொடர்ந்து இங்கே இருந்திருக்க முடியுமா என்பது கேள்விக்குறிதான்.

ஆதரவு என்பது, அரசர்கள் வழங்கிய மானியங்களாகவும் இருந்திருக்கக்கூடும் என்பதற்கு ராஜராஜ சோழனால் ஆதரிக்கப்பட்ட நாகப்பட்டினம் விகாரையே ஆதாரம் என்றும் கூறமுடியும்.

**ஜாதி என்கிற அளவில் பார்க்கும்போது, பௌத்தத்துக்கு இருந்த ஆதரவு, சமுதாயத்தின் கைவினைஞர்களுடைய சங்கங்களால் அமைந்தது என்று பேராசிரியர் ரொமிலா தாப்பர் போன்ற வரலாற்றியலாளர்கள் கூறுகிறார்கள். இந்தக் கைவினைஞர்கள் அமைத்துக்கொண்ட சங்கங்கள்தான் பௌத்தத்துக்கு ஆதரவு நல்கிவந்தன என்பது உண்மையா? உங்கள் ஆராய்ச்சியிலிருந்து தெரியவருவதென்ன? தமிழ்நாட்டிலும் இலங்கையிலும் காணப்பட்ட நிலை எப்படிப்பட்டது?**

கி. மு. மூன்றாம் நூற்றாண்டுக் காலத்திலிருந்து பௌத்த யாத்திரிகர்கள், வாணிகர்கள் ஆகியோர் பற்றிய கதையாடல்கள் (narratives) இருந்துவந்துள்ளன. நீங்கள் கூறும் கைவினைஞர்களின் சங்கங்கள் பற்றிய செய்திகளும் இக்கதைப்பாடல்களில் காணப்படுகின்றன. இந்தியாவிலிருந்து பிறநாடுகளுக்குப் போன யாத்திரிகர்கள் பற்றிய செய்திகளையும் இவற்றில் காணலாம்.

நீங்கள் கூறும் சங்கங்களில் பௌத்தர்கள் மட்டுமின்றி இந்துக்களும் இருந்தனர் என்பதே உண்மை. இவற்றில் சீனர்கள் போன்றவரும் இருந்தனர் என்பதற்கான ஆதாரங்கள் உள்ளன. எனவே, கைவினைஞர்களின் சங்கங்கள் பௌத்தமதரீதியானவை மட்டுமே என்று கூறிவிட முடியாது.

அதே சமயத்தில் இன்னொரு விஷயத்தையும் பார்க்கவேண்டும்; வெளிநாடுகளின் சந்தைகளுக்கான போட்டியில் பௌத்த வணிகர்கள் ஈடுபட்டார்கள் என்பதே அது, இந்த இடத்தில்தான் பௌத்தர்களை "வேண்டத்தகாதவர்கள்" என்றுகூறி வகைப்படுத்தும் போராட்டம் வருகிறது. பௌத்தர்கள் பொருளாதாரரீதியாக மேலாண்மை பெறுவதை விரும்பாதவர்கள் பௌத்தத்துக்கு எதிரான மதரீதியான விவாதத்தை முன்வைக்கிறார்கள் என்று நினைக்கிறேன். இது பற்றி இதற்குமேல் ஆதாரங்கள் இல்லாமல் எதுவும் சொல்ல முடியவில்லை.

**தமிழ்நாட்டிலும், தென்னிந்தியாவின் இதர பிரதேசங்களிலும் சமண பௌத்தர்கள் வன்முறை ரீதியாக ஒடுக்கப்பட்டதற்குக் காரணம் இந்த வாணிகப் போட்டி என்று கூறுமுடியுமா?**

அதுவும் ஒரு முக்கிய காரணம் என்று நினைக்கிறேன். பெருகிவரும் வெளிநாட்டுச் சந்தைகளை யார் கைப்பற்றுவது என்கிற பிரச்சினையோடு இணைந்ததாக இதைப் பார்க்க வேண்டும்.

**வரலாற்றுரீதியாகப் பார்த்தால் ஒன்று தெரிகிறது: அரபு-சீன வாணிபப்பாதைகளைக் கைப்பற்றியதன் மூலம் சோழர்கள் தமது**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



**பேரரசை நிறுவினார்கள். வாணிபப் பாதைகளைக் கைப்பற்றுவதற்காகத்தான் சோழர்கள் இலங்கைக்குள் நுழைந்தனர் என்றே கூறமுடியும். ஆக பௌத்த வணிகர்களைவிடவும் இந்துசமயம் சார்ந்த வணிகர்களையே சோழர்கள் ஊக்குவித்தனர் என்று கொள்ள முடியுமா?**

ஒரேயடியாக அப்படிச் சொல்லிவிட முடியாது. சோழர்களைப் பொறுத்தவரை, தமது பேரரசு என்பதைக் கட்டமைப்பதற்கான லாப நோக்குடன்தான் வாணிபத் துறையைக் கையாண்டனர் எனறே கூறலாம். இந்த விதத்தில் அவர்கள் காரியக்காரர்கள் (rational) என்றே கூறவேண்டும். நாகப்பட்டினம் போன்ற ஊர்கள் சீனவணிகர்கள் பெரும்செல் வாக்குடன் விளங்கியதையும், அங்கே பௌத்த விகாரைக்கு மானியம் வழங்கப்பட்டதையும் பார்த்தால் இது புரியும். ஆக லாபம் எங்கிருந்து யார் மூலமாக வருகிறது என்பதைப் பற்றி சோழர்கள் பெரிதாய்க் கவலைப்பட்டுக் கொள்ளவில்லை.

இலங்கையை எடுத்துக் கொண்டால், அங்கேயுள்ள தமிழ்ப்பகுதிகளில் பௌத்தம் நெடுங்காலமாய் இருந்ததற்கான ஆதாரங்கள் உள்ளன. பொன்னம்பலம் ரகுபதியின் சமீபத்திய Early Settlements in Jaffna An Archaeological survey நூல், யாழ்ப்பாணக் குடாநாட்டிலுள்ள கந்தரோடையில் ஆறாம் நூற்றாண்டுக் காலகட்டம் தொட்டே பௌத்தம் செலவாக்குடன் இருந்துவந்துள்ளதைக் காட்டுகிறது. பௌத்த வணிகர்கள் அங்கே இருந்து வந்துள்ளனர். பின்பு, கடற்பாதைகளில் மாற்றம் ஏற்படும்போது கந்தரோடை அழிகிறது, **மணிமேகலையில்** வரும் மணிபல்லவத்தீவு கந்தரோடையுடன் இணைத்துப் பேசப்படுகிறது. மணிமேகலை இதைக் கூறவில்லை என்றாலும் அக்காப்பியத்துக்கு எழுதப்பட்ட உரைகளில் இத்தகவலைக் காண முடியும். ஆனால் இதையெல்லாம் பற்றி ஆதாரபூர்வமாக எதுவும் பேசமுடிவதில்லை.

கந்தேரோடை ஸ்தூபிகளைப் பார்க்கும் போது இலங்கையின் வடக்குப் பாகத்தில் பௌத்தம் நீண்டநெடுங்காலமாய் இருந்து வந்துள்ளதைக் காணமுடிகிறது. சோழர் காலத்து தமிழ்-பௌத்த மரபோ, இதிலிருந்து பெரிதும் வேறுபட்டது என்கிறேன், சோழர் காலத்து தமிழ்-பௌத்த மரபுக்கு பலமான இந்துசமய அடிப்படைகள் இருக்கின்றன என்று ஏற்கனவே கூறியுள்ளேன்.

ஆக, தமிழ்-பௌத்தம் என்பதும் ஒருமுகப் படுத்தப்பட்ட ஒன்றல்ல. பல தமிழ் பௌத்தம் இருந்திருக்கின்றன எனலாம். ஆனால் தமிழ்-பௌத்தம் பற்றி இலங்கையில் இன்று யாருமே பேசுவதில்லை; பேசினால் கேட்பது மில்லை. இலங்கையின் பௌத்தம் என்பது சிங்கள-பௌத்தம்தான்; சிங்கள மொழியின் மூலம் தொடர்ந்து பாதுகாக்கப்பட்டு, பரப்பப் பட்டு வரும் ஒன்றுதான் என்றே அங்கு நினைக் கிறார்கள்.

**பொன்னம்பலம் ரகுபதியின் ஆராய்ச்சியை சிங்கள அறிவுஜீவிகள் ஏற்றுக் கொள்வதில் சிக்கல் இருக்கும் என்று நினைக்கிறீர்களா? தமிழ் அறிவுஜீவி கள் மட்டத்தில் இந்த ஆராய்ச்சிக் கான எதிர்வினைகள் எப்படி இருக் கின்றன என்பதைப் பார்த்திருக்கிறீர் களா?**

நீங்கள் கூறவிரும்புவது எனக்குப் புரிகிறது. தமிழ்-பௌத்த மரபுகள் பற்றி யாரும் பெரிதாக அக்கறை காட்டுவதில்லை என்கிறீர்கள்! உண்மைதான்.

சென்னைப் பல்கலைக் கழகத்தில் சமணம் பற்றிய ஒரு துறை (Chair) இருக்கிறது. இந்தியாவின் சமணர்கள் இதற்கான ஆதரவுத் தொகையை நல்கியுள்ளனர். ஆனால் பௌத்தம் பற்றிய Chair எதுவும் இல்லை என்றால் பார்த்துக் கொள்ளுங்கள். இது எனக்குத் திகைப்பையே ஏற்படுத்தியது.

சென்னை எழும்பூர் மியூசியத்தை எடுத்துக் கொண்டால், நாகப்பட்டினம் பௌத்த வெண் கலச் சிற்பங்கள் பற்றிய அரிய நூல் ஒன்று அங்கே உள்ளது. பல ஆண்டுகளாக இது மறுபதிப்பு செய்யப்படவில்லை. வேறெங்கும் இப்பிரதி கிடைப்பதில்லை. இதுதான் நிலைமை.

ஆந்திரத்திலுள்ள அமராவதியில் பௌத்தம் பற்றிய மிகப் பிரம்மாண்டமான ஆராய்ச்சி கடந்த சில ஆண்டுகளாக மும்முரமாக நடை பெற்றுக் கொண்டிருக்கிறது.

**சமணம் பற்றிய நிலைமை பரவா யில்லை என்று கூறினீர்கள். பத்தாம் நூற்றாண்டில்எழுதப்பட்ட சீவகசிந்தா மணி ஒரு சமண நூல்தான்.**

நேற்றுதான் தமிழ்நாட்டிலுள்ள சமணக் கல்வெட்டுகள் பற்றிய ஒரு தொகுப்பு நூலை நான் வாங்கினேன். பௌத்தம் பற்றிய நூல் எதுவும் இப்படி வெளியிடப்பட்டதில்லை.

**அமராவதியில் சிலவாரங்கள் தங்கினீர் கள் அல்லவா? அங்கே நடக்கிற ஆராய்ச்சி பற்றி என்ன நினைக்கிறீர் கள்?**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சுமார் 49 இடங்களில் கிடைத்த சிற்பங்கள் முழுமையாகத் தொகுக்கப்பட்டு விட்டன. இன்னும் நூறுக்கும் மேற்பட்ட இடங்களில் வேலை நடக்கிறது. 150-க்கும் மேற்பட்ட இடங்களில் பௌத்த சிற்பங்கள் இருக்கின்றன. ஸ்வீடனிலிருந்து கிளம்புமுன் இத்தனை சிற்பங்களைப் பார்ப்போம் என்று நான் நினைக்கவே இல்லை! இத்தனை அடர்த்தியான அளவில் பௌத்தச் சிற்பக்கலையானது இருக்கும் என்று நான் நினைத்ததே இல்லை. நாகார்ஜுனகொண்டா, கன்டசாலா மற்றும் இதர இடங்களில் காணப்படுகிற பௌத்தச் சிற்பங்கள் படைப்பாற்றலில் மிகவும் பிரத்தியேகமானவை என்று கூறலாம். It is very original, sensual kind of Buddhist art.

**இலங்கையின் பௌத்தச் சிற்பங்களுடன் இவற்றை ஒப்பிட்டால்?**

அமராவதி கலைதான் இலங்கையின் பௌத்த சிற்பங்களைப் பாதிப்பதாக அமைகிறது. இதுதான் உண்மை. ஆனால் சிங்கள பௌத்தர்கள் இதற்கு நேர்மாறாக சொல்கிறார்கள். உண்மையில் தென்கிழக்காசியாவின் மொத்த பௌத்தச் சிற்பங்களுக்குமே அமராவதி ஒரு முன்னோடி எனலாம்.

**தமிழ்-பௌத்தம் பற்றிய உங்களது ஆராய்ச்சி முயற்சிகளுக்கு சிங்கள-பௌத்தர்களின் எதிர்வினை என்னவாக இருக்கும் என்று நினைக்கிறீர்கள்?**

இவ்வளவு காலமாக சிங்கள-பௌத்தம் பற்றிப் படித்ததில் எனக்கு ஒரு விஷயம் தெளிவாகியிருக்கிறது: ''தமிழ்-பௌத்தம்'' என்கிற வார்த்தையைக் கூட நான் கேட்டதில்லை அங்கே.

உதாரணமாக, தென்னிந்தியாவிலிருந்து இலங்கைக்குப் போன புத்தகோஷர், தர்மபாலர் போன்ற பௌத்த உரையாசிரியர்களை எடுத்துக் கொள்வோம். சிங்கள-பௌத்த நூல்கள் இவர்களை பௌத்தர்களாக, சிங்கள-பௌத்தத்தை வளர்ப்பவர்களாகத்தான் காட்டுகின்றன. இவர்களை தமிழர்களாகவோ, வேறு யாராகவோ இந்நூல்கள் பார்க்கவில்லை. இவர்கள் அனுராதபுரத்திலுள்ள மகாவிகாரையில் பணிபுரிந்துவந்தனர். புத்தகோஷர் தமது வாழ்க்கையின் கடைசிக்காலத்தில் தென்னிந்தியாவுக்குத் திரும்புகிறார். இதைப்பற்றிய விவரம் சிங்கள-பௌத்த நூல்களில் காணப்பட்டாலும் இதிலிருந்து புத்தகோஷர் யார் என்கிற கணிப்பு எதுவும் செய்யப்படுவதில்லை. இப்படியாக, பௌத்தத்தின் தென்னிந்தியச் சூழல் இந்நூல்களில் விலக்கப்பட்டே வந்துள்ளது. அமராவதி கலையைக் கூட சிங்கள-பௌத்தத்தின் வழித்தோன்றலாகத்தான் பார்க்கிறன இந்நூல்கள்.

**தஞ்சாவூரில் நீங்கள் கண்ட புத்தர் சிலைகளுக்கும் அமராவதி கலைக்கும் உள்ள வித்தியாசம் என்ன?**

சோழர்கால புத்தர் சிலைகள் 11 அல்லது 12ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவை என்று கூறினேன். இவை, சில பௌத்த நூல்-மரபுகளின் (textual traditions) அடிப்படையில் உருவாக்கப்பட்டவையாக உள்ளன. உதாரணமாக, இங்கே புத்தரின் ஐந்து கைவிரல்களின் நீளமும் ஒரே அளவுதான். கால்விரல்களும் அப்படித்தான். வடிவமைத்த சிற்பிகள் பௌத்த சிற்பமரபின்படி செல்லாமல் நூல்-மரபுகளின்படி சென்றுள்ளனர் என்பேன். சிற்பக்கலை என்பது வழக்கமாக இப்படி இருப்பதில்லை. It is not textual but self-referential. இருந்தாலும், சோழர்கால புத்தர் சிலைகள் குறிப்பிடத்தக்கவிதத்தில் அமைந்துள்ளன என்று கூறியாக வேண்டும். இதுபற்றிய ஆராய்ச்சியை நிச்சயம் தொடரப் போகிறேன்.

அமராவதியை எடுத்துக் கொண்டால், அங்குள்ள சிற்பங்களுக்கும் நூல்-மரபு இருக்கத்தான் செய்கிறது; இருந்தாலும் அச்சிற்பங்கள் நூல்-மரபுகளை முழுமையாகப் பின்பற்றுவதில்லை; பல இடங்களில் முரண்பட்டும் செல்கின்றன. நாட்டுப்புற வாழ்க்கையை அடிப்படையாகக் கொண்டுள்ளன. அங்குள்ள ஸ்தூபிகளில் முழுமார்புகளையும், பெண்குறியையும் நேரடியாகக் காட்டும் சிற்பங்களைக் காணலாம். பௌத்த நூல்-மரபுகளில் இவை இருப்பதில்லை.

**தஞ்சை புத்தர் சிலைகளை இதர சோழர் கால சிற்பங்களுடன் இணைத்துப் பார்க்க முடியுமா?**

பௌத்த வாசகங்களை இப்படி இதர மத வாசகங்களுடன் தொடர்புபடுத்திப் பார்க்க வேண்டியிருக்கிறது உண்மைதான். இங்கே தொல்பொருள் ஆராய்ச்சித் துறையிலுள்ள எனது நண்பர் தயாளன், தமிழ்ச் சைவ நூல் ஒன்றில் புத்தரின் கதை இருப்பதைத்தான் இச்சிற்பங்கள் கூறுகின்றன என்றும் சொல்கிறார். இதுபற்றிய ஆராய்ச்சியும் தொடரத்தான் வேண்டும்.

பேட்டி எடுத்தவர் :
**நாகார்ஜுனன்**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# துப்பாக்கியால் தேசியத்தை உருவாக்க முடியுமா?

சி. அறிவுறுவோன்

வளர்ச்சியடைந்த ஜனநாயக அமைப்பில் தான் தேசிய சுயநிர்ணய உரிமை என்ற ஜனநாயகத்தின் மிகவுயர்ந்த வடிவம் தங்கியிருக்க முடியும். எடுத்துக் காட்டாகச் சோவியத் ஒன்றியத்தில் தேசிய சுயநிர்ணய உரிமையைப் பெற்றிருந்தும் லிதுவேனியா, எஸ்தோனியா, லாட்வியா போன்ற தேசங்கள் பிரிந்துபோக முடியாத வாறு தடுக்கப்படுகின்றன. நார்வே பிரிந்தபோது பிரச்சினை தோன்றவில்லை எனவே, தேசிய சுயநிர்ணய உரிமை என்பது ஜனநாயக உயர்வளர்ச்சியின் ஓர் அம்சம் என்பதை மறந்துவிடக்கூடாது.

சமூக ஜனநாயகமே தோன்றியிராத இந்தியாவில் தேசிய சுயநிர்ணய உரிமைக்கான கோரிக்கை என்பது அதிகப்படியான விஷயம்தான். அப்படியே அக்கோரிக்கைக்கு இந்தியாவில் சட்டவடிவம் அளிக்கப்பட்டால் கூட அது ஏட்டளவில் நின்று போகக் கூடியதாகவே இருக்கும். காரணம் இந்தியாவில் ஜனநாயகம் என்பது நாடாளுமன்றத்தையும் சட்ட மன்றத்தையும் தேர்ந்தெடுப்பதற்காக உருவாக்கப்பட்ட சட்ட விதிமுறைகளாக இருக்கின்றதே தவிர மக்களின் ரத்தத்தில் ஊறிய கலாச்சாரமாக வளரவில்லை.

எனவே, தேசிய சுயநிர்ணய உரிமைக்காகக் குரல் கொடுப்பது என்பது பிரிவினை நோக்கம் கொண்டதல்ல என்ற விளக்கம் எவ்வளவு சரியோ அவ்வளவு சரியானது தேசிய சுயநிர்ணய உரிமையை ஏதாவது ஒரு மாநிலம் பயன்படுத்தும் போது இந்திய ஆளும்வர்க்கம் அதைத் தடுக்கும் என்பதும். அந்தக் கட்டத்தில் விடுதலைப் போராட்டத்தைத் தவிர வேறு வழியில்லை. நிலைமை இவ்வாறிருக்கையில் தேசிய சுயநிர்ணய உரிமை என்னும் திரிசங்கு சொர்க்கம் எதற்கு? பருவத்தை அடைந்த ஒருவருக்குக் குரலில் கரகரப்புத் தட்டுவதில்லையா? அப்படிப்பட்டது தான் தேசிய சுயநிர்ணய உரிமையும். அதற்குரிய சூழலில்தான் அதைப் பிரயோகிக்க முடியும்.

இந்தியாவில் முதலாளித்துவம் இறக்குமதி செய்யப்பட்டது போலவே ஜனநாயகமும் இறக்குமதி செய்யப்பட்டு உள்ளது. அதைப் போலவே தேசிய சுயநிர்ணய உரிமை என்ற கருத்தும் இறக்குமதி செய்யப்படுகிறதே தவிர இங்குள்ள நிலைமைகளோடு பொருந்தி வரப்போவதில்லை.

எப்படி என்றால், தமிழன் என்பது எந்த ஒரு சாதியையும்விட வலிமை குன்றியதாகவே இருக்கிறது. தமிழன் நிலையே இதுவென்றால் ''இந்தியன்'' நிலையைப் பற்றிச் சொல்லவே வேண்டாம்.

ஒவ்வொரு சாதிக்கும் ஒவ்வொரு நீதி, பழக்க வழக்கம், கலாசாரம் என்று இன்று வரை நீடிக்கும் இந்தியாவில் மொழியால் மட்டுமே ஒரு பேரளவு மக்களை அடையாளப்படுத்த முடிகிறது. ஐரோப்பாவில் பார்க்க முடிவதுபோல் இங்கே தேசிய இனத்தை அவ்வளவு கறாராக இனங்காண இயலாது. எனவே தான் இந்தியாவில் மொழிவாரி மாநிலம் உருவானது. இங்கே பழைய சமூகத்தின் உடலுக்குள் முதலாளித்துவம் புகுந்து கொண்டிருப்பதே அதற்குக் காரணம்.

**தமிழன் என்பது எந்த வொரு சாதியையும் விட வலிமை குன்றிய தாகவே இருக் கிறது. தமிழன் நிலையே இது வென் றால் ''இந்தி யன்'' நிலை யைப் பற்றிச் சொல் லவே வேண் டாம்.**

இந்தியாவில் சாதிக்கு எதிரான போராட்டத்தை வர்க்கப் போராட்டத் துடனும் சோஷலிசத்துடனும்தான் இணைத்து நடத்த முடியும். மேடு பள்ள மான முதலாளித்துவ வளர்ச்சியைச் சீர் செய்வதனாலேயோ ஜனநாயகத்தின் எல்லைகளை விரிவு படுத்துவதனாலேயோ இது சாத்தியமல்ல. ஏனெனில் முதலாளித் துவக் காலகட்டத்திற்கு எற்றாற்போல் சாதிகள் தகவமைக்கப்படுகின்றன. எனவே சோஷலிச சகாப்தத்திலும் கூட இந்தியாவில் சாதிக்கெதிரான போராட்டம் நீடித்தே இருக்கும். ஆதலால் இந்தியா

www.tamilarangam.net



வில் தேசிய இனங்களுக்கான முழு வளர்ச்சியும் வீரியமும் சோஷலிச சகாப்தத்தோடு மட்டுமே தொடர்புபட்டு உள்ளது என்பது தெளிவாகும்.

ஒரு சாதி மற்றொரு சாதிக்கு எதிராக நடத்தும் போராட்டம் சாதி எதிர்ப்புப் போராட்டம் அல்ல. அதேபோல் சாதிய ரீதியான தொழிற்சங்க அமைப்போ அரசியல் கட்சியோ சாதிக்கெதிரான போராட்டந்தை நடத்த இயலாது. அதே போல் தொழிலாளி வர்க்கக் கட்சி மற்றும் அதன் வெகுஜன அமைப்புகளில் சாதிப் பிடிமானம் இருந்தாலும் வர்க்கப் போராட்டத்தைக் கறாராக நடத்த இயலாது. இவ்வாறான நிலைமைகள் இந்தியாவில் நீடிக்கின்றன. இவை எதைக் குறிக்கின்றன? நவீன அரசியல் கலைச் சொற்களில் கூட பழைய சமூகத்தின் நோக்கங்கள் பொருள்பட்டு நிற்பதையே குறிக்கின்றன.

**தேசியம் என்ற சொல் ஐரோப்பாவைப் போல சுதந்திரம், ஜனநாயகம், சகோதரத்துவம் ஆகியவற்றை உள்ளடக்கி இங்கு வழங்கப்படவில்லை.**

எனவே தேசியம் என்ற சொல் ஐரோப்பாவை போல சுதந்திரம், ஜனநாயகம் (சமத்துவம்), சகோதரத்துவம் ஆகியவற்றை உள்ளடக்கி இங்கு வழங்கப்படவில்லை என்பது உண்மை. சாதி, மதம் இவற்றையும் சேர்த்துக் குழைத்த ஒரு புதிய கலவையாகத்தான் இந்தியாவில் தேசியம் முன்வைக்கப்படுகிறது. உண்மையில் அது தேசியம் ஆகாது. ஜனநாயகத்தின் உயர்வளர்ச்சியில் பொருந்தியிருக்கக்கூடிய தேசிய சுய நிர்ணய உரிமையை இதனுடன் பொருத்திப் பார்ப்பது அமாவாசைக்கும் அப்துல் காதருக்கும் முடிச்சுப் போடுவதேயாகும். எனவே மாநில மக்களின் தேவையைக் கணக்கிலெடுத்துக் கொண்டு மாற்று நடவடிக்கையில் ஈடுபட வேண்டும்.

இதைப் புறக்கணித்துத் தேசிய சுய நிர்ணய உரிமையை அப்படியே இறக்குமதி செய்வதற்காக ஆயுதப் போராாட்டத்தை மேற்கொள்வதானால் வெற்றியடைந்துவிட முடியாது. வேண்டுமானால் நாகாக்களும் மிஜோக்களும் போல நீண்ட நெடுங்காலம் ஆயுத பாணிகளாக இருக்கலாம், அவ்வளவே. இதனால் இந்திய ஆளும் வர்க்கத்துக்கு உண்மையில் நெருக்கடி தோன்றவில்லை. மாறாக ஆளும் வர்க்கத்துக்கு வசதியே செய்து கொடுப்பதாகும். 'ஒருமைப்பாடு' எனும் வஜ்ராயுதத்தை ஆளும் வர்க்கம் தூக்கும் போதெல்லம் பெயரளவிலான ஜனநாயகத்தையும் கொன்று போட்டுவிட வாய்ப்பேற்பட்டு விடுகிறது.

எனவே கடந்தகால அனுபவங்களையும் கணக்கிலெடுத்துக் கொண்டு நடைமுறை சாத்தியமான அளவிற்கு மட்டுமே விஷயங்களைப் பரிசீலிக்க வேண்டும்.

அந்த வகையில் பார்த்தால் மத்திய அரசிடம் குவிந்திருக்கும் பேரளவான அதிகாரங்களை மாநில அரசுக்கு மாற்றவும், அப்படி மாற்றியதை மீண்டும் மாநில அரசிடமிருந்து பறித்துக் கொள்ளாமல் இருக்க தேவையான ஏற்பாடுகளைச் செய்வதற்குமான போராட்டத்திற்குச் ஜனநாயக ரீதியில் நாடுதழுவிய முறையில் மக்களை கிளப்பிவிடுவதே ஆளும் வர்க்கத்துக்கு நெருக்கடியையும், ஜனநாயக வளர்ச்சியின் ஒருபடி முன்னேற்றத்தையும் கொண்டுவர உதவும். □

## ஈழச் செய்திகள்

- இலங்கைத் தமிழ் அகதிகளுக்காகத் தமிழ் நாட்டின் 19 மாவட்டங்களில் 10 ஆயிரம் குடிசைகள் கட்டும் பணி பூர்த்தியடையும் நிலையில் உள்ளது என்று அகதிகள் புனர் வாழ்வு விசேஷ ஆணையாளர் சி. என். ராமதாஸ் கூறினார் (20-9-90, தினமணி)
- இலங்கையில் தமிழர்கள் காலங்கலமாக பெரும்பான்மையினராக வசிக்கும் வடக்கு, கிழக்கு மாகாணங்களை இணைப்பது தொடர்பாக தமிழர், முஸ்லிம் கட்சிகளுக்கு இடையே நடந்துவரும் பேச்சுவார்த்தைகள் முறிந்து போயின. முஸ்லிம்களுக்கென்று தனி மாகாணம் வேண்டும் என்று முஸ்லிம் கட்சியினர் வற்புறுத்தியதால் இந்தப் பேச்சுவார்த்தை தோல்வி அடைந்தது. (30-9-90, தினமணி)

www.tamilarangam.net

2

□ □ □ அ. மார்க்ஸ்

# மார்க்சியம் தோற்கவில்லை

## நெருக்கடிக்குள்ளாகியிருப்பது

## ''அறியப்பட்ட'' மார்க்சியமே

சோசலிசக் கட்டுமான முயற்சிகள் தோல்வியடைந்துவிட்டன எனக் குரலெழுப்புகிற யாரும் இதனைத் தர்க்க பூர்வமாகவும் கோட்பாட்டு ரீதியாகவும் நிறுவிவிடவில்லை என்றோம். முதலாளியத்தின் தவிர்க்க இயலாத நெருக்கடிகள் குறித்து மார்க்சியம் இதுவரை முன் வைத்துள்ள கோட்பாடுகள் எதற்கும் இவர்கள் பதிலளிக்கவுமில்லை. சோசலிசமும் சனநாயகமும் இணைந்திருப்பது எவ்வாறு சாத்தியமில்லை என்பதையோ, மையப்படுத்தப்பட்ட திட்டமிடுதல் என்பது எவ்வாறு உற்பத்தித் தேக்கத்திற்கும், அறிவியல்/தொழில்நுட்ப வளர்ச்சியின்மைக்கும் தவிர்க்க இயலாமல் இட்டுச் செல்லும் என்றோ தனிச் சொத்தும் சநதைப் பொருளாதாரமும் சனநாயகம் செழித்தோங்குவதற்கான நிபந்தனைகளாக எவ்வாறு விளங்குகின்றன என்பது பற்றியோ இன்று மார்க்சியம் காலாவதியாகிவிட்டது என்று பத்திரிகைகளில் கட்டுரைகள் எழுதி மகிழ்ந்து கொண்டிருக்கும் எந்த ஒரு முதலாளிய அரசியல்வாதியும் பொருளாதார நிபுணரும் கோட்பாட்டு ரீதியாக நிரூபணம் எதையும் மக்கள் முன் வைத்துவிடவில்லை என்பது கவனத்தில் நிறுத்த வேண்டிய மிக முக்கியமான விசயம். தங்களது முதலாளிய வழுவல்களுக்கு வக்காலத்து வாங்கும் பு.பி. சமுதாயங்களிலுள்ள பொதுவுடமைக் கட்சியினரும் லியோனால்ட் அபால்கின், அபேல் அபென்பெக்யான், அலெக்சி கிவா போன்ற ரசிய நிபுணர்களும் கூட தங்கள் நாட்டுப் பிரச்சினைகளைப் பட்டியலிட்டு, இதற்கான தீர்வு முதலாளியச் சீர்திருத்தங்களே என்றுதான் சொல்கிறார்களே யொழிய சோசலிசக் கட்டுமானம் எவ்வாறு இப் பிரச்சினைகளுக்குக் காரணமாகிறது என்பதைத் தர்க்க பூர்வமாக விளக்கியதில்லை.

சோசலிசக் கட்டுமானமும் மார்க்சியமும் காலாவதியாகிவிட்டன என்று இவர்கள் திரும்பத் திரும்பச் சொல்வதற்குச் சுட்டிக் காட்டுகிற ஆதாரமெல்லாம் ஒன்றே ஒன்றுதான். புரட்சிக்குப் பிந்திய சமுதாயங்களில் ஏற்பட்டுள்ள நெருக்கடிதான் அது. எழுச்சி கொண்ட மக்கள் அதிகாரத்துவத்திற்கு எதிராக ஒன்றிணைந்து நின்று ஒரே குரலில் முழங்கி சீசெஸ்குவையும் ஹோனேக்கரையும் தூக்கி எறிந்ததும், லெனின் சிலைகள் உடைக்கப்படுவதும், மார்க்சிய நூலகங்கள் எரிக்கப்படுவதும் நடைபெறும் தேர்தல்களில் பொதுவுடமைக் கட்சிகள் துடைத்தெறியப்படுவதும், மேற்கத்திய நுகர் பொருள் பண்பாட்டின் மீது பு.பி. சமுதாயங்களிலுள்ள மக்கள் காட்டும் ஆர்வமும் மட்டுமே இவர்கள் காட்டும் சான்றாதாரங்கள். கண்முன் நிகழ்ந்துள்ள இந்தச் சம்பவங்களை யாரும் மறுத்துவிட முடியாது. இவை சோசலிசக் கட்டுமானம் குறித்த மிக அடிப்படையான சில பிரச்சினைகளை எழுப்பியுள்ளன என்பதிலும் யாருக்கும் கருத்து வேறுபாடு இருக்க முடியாது. ஆனால் இவற்றின் அடிப்படையில் இவர்கள் வந்தடைகிற முடிவுகள்—பொதுவுடைமை என்கிற கோட்பாடு, மார்க்சியம் என்கிற தத்துவம், சோசலிசம் என்கிற நடைமுறை தோற்றுவிட்டன என்பவை—எந்த அளவிற்குச் சரியானவை, இவர்கள் சுட்டிக்காட்டும் காரண-விளைவுத் தொடர்பு எந்த அளவிற்குத் தர்க்க பூர்வமானது என்பதைக் கண்டறிய நாமாவது சற்றுத் தர்க்க அடிப்படையில் சிந்தித்தாக வேண்டும்.

முதலில் பு.பி. சமுதாயங்கள் எதுவும் பொதுவுடமைச் சமுதாயங்கள் அல்ல என்பதை நாம் நினைவுபடுத்திக் கொள்வோம். லெனினோ, ஸ்டாலினோ, குருச்சேவோ, கோர்ப்பசேவோ, மாவோவோ, சீசெஸ்குவோ அல்லது வேறு யாருமோ எந்நாளும் இப்படி உரிமை கொண்டாடியதுமில்லை. சோசலிச உறவுகள் நிலைநாட்டப்பட்டுவிட்டதா என்கிற விசயமே மார்க்சியர்கள் மத்தியில் விவாதப் பொருளாக இருந்து வந்துள்ள போது பொதுவுடமை உறவுகள் நிலைநாட்டப்பட்டுவிட்டதா என்கிற கேள்விக்கே இடமில்லை. பொதுவுடைமைச் சமுதாயத்தின் இயக்க விதிகள், நிறுவன வடிவங்கள் ஆகியவை குறித்த முழுமையான பார்வையை முன் வைத்துவிட்டதாகவும் மார்க்சியம் உரிமை கொண்டாடியதில்லை. எதிர் கால அமைப்பு குறித்த ஒரு முழுமையான வரைபடத்தை உருவாக்குவதற்கு மார்க்ஸ்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



என்றுமே உடன்பட்டதில்லை. நிலவுகிற அமைப்பு குறித்து சமரசமில்லாத விமர்சனங் களை முன் வைப்பது மட்டுமே நமது கடமை; எதிர்காலத்திற்கான எல்லாவிதமான தீர்வு களையும் முன் வைப்பது நமது பணியல்ல என்பதை அவர் தெளிவாகக் கூறியிருக்கிறார். எனவே பு.பி. சமுதாயங்களின் நெருக்கடிகளின் அடிப்படையில் கூறப்படுகிற பொதுவுடமைச் சமுதாயம் என்கிற கோட்பாடே தவறானது என்கிற கூற்றில் எந்த நியாயமு மில்லை. அதே போல மார்க்சியம் என்பது பு.பி. சமுதாயங்கள் குறித்த ஒரு அறிவியலு மல்ல. அதன் பல்வேறு பரிமாணங்களில் இது ஒன்று என வேண்டுமானால் சொல்லலாம். உண்மையில் முதலாளியச்சமுதாயத்தின் இயக்க விதிகளைக் கண்டறிந்ததே அதன் பிரதான பணி. எனவே முதலாளியம் உள்ள வரை மார்க்சியத்தின் தேவையும் இருந்தே தீரும். தவிரவும் பு.பி சமுதாயங்கள் என்பது எந்த அளவிற்கு மார்க்சியப் பாதையில் சென்றன என்பதே கேள்விக் குறியாக இருக்கும்போது இந்தக் கேள்விக்குப் பதிலைச் சொல்லாமல் இன்றைய நெருக்கடிகளின் அடிப்படையில் மார்க்சியம் தோற்றுவிட்டது எனச் சொல்வது அடிப்படையில் நேர்மையற்ற செயலாகும். லெனினது நடைமுறைகட்கும் ஸ்டாலினுடை யதற்கும் வேறுபாடுகள் உண்டு; லெனின்-ஸ்டாலின் நடைமுறைகளிலிருந்து குருச்சேவும், மாவோவும் தனித்தனி வழிகளில் வேறுபட்டனர். கிழக்கு ஐரோப்பிய நாடுகள் எல்லாவற்றிற்கு மிடையே சில பொதுவான அம்சங்கள் இருந்த போதிலும் அவற்றின் சோசலிசக் கட்டுமானங் களிடையே தனித்துவமான வேறுபாடுகள் உண்டு. டிட்டோவும், அன்வர் ஹோஜாவும் இவர்கள் எல்லோரிடமிருந்தும் வேறுபட்டனர். இந்தப் பாதைகளிடையே எது சரியான மார்க் சியப் பாதை என்பதில் உலக மார்க்சியரிடையே கடும் கருத்து மாறுபாடுகள் உண்டு.

தவிரவும் மாவோயிஸ்டுகள் யாரும் ரசியா வையும் கிழக்கு, ஐரோப்பிய நாடுகளையும் சோசலிசச் சமுதாயங்களாக ஏற்றுக் கொள்வ தில்லை. இத்தாலி தவிர இதர மேற்கு ஐரோப்பியப் பொதுவுடமைக் கட்சிகளும், அமெரிக்கப் 'புரட்சிகரப் பொதுவுடமைக் கட்சி' யும் கூட ரசியாவும் கிழக்கு ஐரோப்பிய நாடு களும் திரிபுவாதப் பாதையைத் தேர்ந்தெடுத்து விட்டன என்கிற கருத்தையே ஏற்றுக் கொள் கின்றன. இவர்களில் பலர் இந்நாடுகள் அரசு முதலாளியச் சமுதாயங்கள் எனவும் ரசியாவைச் சமூக ஏகாதிபத்தியம் எனவும் குறிப்பிடு கின்றனர். இந்தக் கருத்துக்களை முற்றாகப் புறக்கணித்து மௌனம் சாதித்துக் கொண்டே இந்தச் சமூகங்களின் நெருக்கடிகளை மார்க் சியம் மற்றும் சோசலிசக் கட்டுமானம் ஆகிய வற்றின் தோல்வியாகச் சித்திரிப்பது அறியாமை அல்லது அயோக்கியத்தனத்தின் உச்ச கட்ட மாகும். வேண்டுமானால் அவர்கள் இப்படிச் சொல்லட்டும்: 'புரட்சிக்குப் பிந்திய சமூகங் களில் உண்மையிலே நிலவுகிற கட்டுமானங்கள் தோல்வியுற்றுள்ளன.'

கோட்பாட்டு நியாயமும் தர்க்க பலமும் இல்லாத இவர்கள் கூற்றின் இன்னொரு பக்கமான முதலாளியக் கட்டுமானம் வெற்றி பெற்று விட்டது என்பதற்கும் எந்த ஆதாரமும் இல்லை. முதலாளியம் என்றால் அமெரிக்கா வும் ஜப்பானும் மட்டுமல்ல. இந்தியா, வங்க தேசம், பிரேசில், கானா இன்னும் பல வறுமையில் உழலும் ஆசிய ஆப்பிரிக்க நாடு களும் முதலாளியப் பாதையில் சென்று கொண் டிருப்பவைதான். அதேசமயத்தில் பு.பி. சமுதா யங்கள் எதிலும் பட்டினிச் சாவுகளோ வேலை இல்லாத் திண்டாட்டமோ கிஞ்சித்தும் இல்லை என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. முதலாளியமும் சனநாயகமும் ஒரு நாணயத் தின் இரு பக்கங்கள் என்கிற கூற்றும் இப்படிப்பட்டதுதான். முதலாளியச் சனநாய கம் என்பது வெறும் ''முதலாளியச்'' சனநாயகம் மட்டுமே; அது உண்மையான சனநாயகமாகாது என்பதை மார்க்சியம் தொடர்ந்து வற்புறுத்தி வந்திருக்கிறது. இந்தியா போன்ற முதலாளியச் சனநாயகம் கொடிகட்டிப் பறக்கும் நாடுகளில் எந்த அளவிற்கு சனநாயக/மனித உரிமைகள் பாதுகாக்கப்படுகின்றன என்பதை நாம் அனுபவபூர்வமாக அறிவோம். அமெரிக்க ஆதரவுக் கோன்ட்ரா படையினரின் அட்டூழியங் களால் அமைதி கடுமையாகப் பாதிக்கப்பட் டிருந்த நிகரகுவாவின் இடதுசாரி அரசின் கீழ் மனித உரிமைகள் பாதுகாக்கப்பட்ட அளவிற்குக்கூட இந்தியா போன்ற நாடு களில் மனித உரிமைகள் பாதுகாக்கப்பட வில்லை. உலகிலேயே மிக மோசமாக மனித உரிமைகள் பறிக்கப்படும் நாடுகளில் ஒன்று இந்தியா என்று கூறுவது நாம் மட்டுமல்ல; சர்வதேசப் பொது மன்னிப்பு அவை போன்ற நிறுவனங்களே இதைச் சொல்லியுள்ளன. இந்தியா போன்ற நாடுகளில் முழுமையான சனநாயகம் இல்லை என்றாலும் கூட பு. பி. சமுதாய அரசுகளுடன் ஒப்பிடும்போது பேச் சுரிமை, எழுத்துரிமை, ஆட்சியாளரைத் தேர்ந் தெடுக்கும உரிமை போன்றவை இங்கே வழங் கப்பட்டுள்ளதல்லவா என்கிற கேள்வி நியாய மானதே. இதற்கான பதிலை நாம் இறுதியில் விரிவாய்ப் பார்ப்போம். இங்கே நாம் வலி யுறுத்த விரும்புவதெல்லாம் இதுதான். மேற்படி உரிமைகள் வழங்கப்பட்ட நாடுகள் எல்லாம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



முதலாளியக் கட்டுமானப் பாதையை மேற்கொண்ட நாடுகளாக இருக்கலாம். ஆனால் முதலாளியக் கட்டுமானப் பாதையை மேற்கொண்டுள்ள நாடுகள் அனைத்திலும் மேற்படி உரிமைகள் உள்ளன என்று சொல்லிவிட முடியாது. வேறு வார்த்தைகளில் சொல்வதானால் மையப்படுத்தப்பட்ட திட்டமிடுதலைத் தவிர்ப்பதும் சந்தைப் பொருளாதாரத்தையும் தனிச் சொத்தையும் அடிப்படையாகக் கொள்வதும் முதலாளியச் சனநாயக உரிமைகளுக்குக் கூட உத்தரவாதமாகிவிடாது என்பதற்கு தென் ஆப்ரிக்கா, சிலி, ஈரான், மார்க்கோசின் பிலிப்பைன்ஸ், பர்மா போன்றவை எடுத்துக்காட்டுகளில்லையா?

வளர்ச்சியில் தேக்கம், மறைமுகமான பண வீக்கம்/வேலை இல்லாத் திண்டாட்டம், லஞ்ச ஊழல், பண்பாட்டுச் சீரழிவு, மூலதனப் பங்கீட்டைத் திறமையாகச் செய்யாததன் விளைவாகக் கடும் விரயம் ஆகியவை சந்தைப் பொருளாதாரம் ஆணையில் வைக்கப்படாமையின் விளைவு எனச் சொல்லப்படுகிறது. மையப்படுத்தப்பட்டத் திட்டமிடுதல் மேற்கொள்ளப்பட்ட பு. பி. சமுதாயங்களில் இந்தப் பிரச்சினைகள் எல்லாம் உள்ளன என்பதில் கருத்து வேறுபாடில்லை ஆனால் முதலாளியக் கட்டுமானமும் சந்தைப் பொருளாதாரமும் நிலவுகிற சமூகங்களிலும் இதேபிரச்சினைகள் உள்ளன என்பதையும்நாம் மறந்துவிடலாகாது. கடந்த பத்தாண்டுகளில் உலக முதலாளியம் இதே நெருக்கடிகளை இன்னும் அதிகப் பரிமாணத்தில் சந்தித்திருக்கிறது. வளர்ச்சித் தேக்கம், பத்து சதத்திற்கும் மேல் பண வீக்கம், கடும் வேலை இல்லாத் திண்டாட்டம் மோசமான லஞ்ச ஊழல் ஆகியவை அமெரிக்கா-ஜப்பான் உள்ளிட்ட முதலாளிய நாடுகளை ஆட்டிப்படைப்பதை நாம் புள்ளிவிவரங்கள் கூறி விளக்கத் தேவையில்லை. இந்நாடுகளில் லாபவிதங்கள் குறைந்து வருகின்றன (1966—13.4%; 1976—9.27%); தேசிய வருமானத்தில் கூலியின் பங்கு குறையும் (1970—74%; 1986—61%) அதே வேளையில் வாழ்க்கைச் செலவு கடுமையாக அதிகரித்துள்ளது [1950—2%; 1984—6.7% (USA)] முதலாளிய நாடுகளின் பண்பாட்டுச் சீரழிவை நாம் விளக்கத் தேவையில்லை. அமெரிக்காவின் ஈரான்-கோன்ட்ரா ஊழல் இந்தியா/ஸ்வீடனின் போபார்ஸ் ஊழல், ஊழல் குற்றச் சாட்டில் ஜப்பான் பிரதமர் பதவி விலக நேர்ந்தமை, கருப்புப்பணம், கள்ளச் சந்தை, போதைப் பொருள் கடத்தல் மேலைப் பொருளாதாரங்கள் ஆட்டங் கண்டிருப்பது என அடுக்கிக் கொண்டே போகலாம்.

அவ்வளவு ஏன்? ஏகாதிபத்தியங்களின் கொள்ளைக்காடாக மாறுகிற சாத்தியத்தை மறுத்த ஒரு வளர்ச்சிப் பாதையை மூன்றாம் உலக நாடுகளுக்கு முதலாளியம் தந்துவிட முடியும் என இன்று எந்த ஒரு முதலாளியப் பொருளாதார நிபுணராவது பரிந்துரைப்பதற்குத் தயாராக இருக்கிறாரா? இந்த வளர்ச்சிப் பாதை என்பது ஏகாதிபத்தியங்களுக்கும் அதன் உள்ளூர்த் தரகர்களுக்கும் மட்டுமே உகந்ததாக இருக்கும் என்பதை வரலாறும் நிரூபித்திருக்கிறது.

பு. பி. சமுதாயங்களில் கடும் ஏற்றத்தாழ்வுகள் நிலவுகின்றன என்பதில் நமக்கு ஐயமில்லை. ஆனால் இந்த நாடுகள் எதிலும் ஒரு பக்கம் பல அடுக்கு மாளிகைகளும் இன்னொரு பக்கம் குடிசைக்குள்ளேயே மலங் கழித்துப் பொட்டலம் கட்டிவைக்க வேண்டிய கொடுமையும் எனச் சமூகம் பிளவு பட்டிருக்கவில்லை என்பதை நாம் மறந்துவிடலாகாது. பு. பி. சமுதாயங்களில் தனியார்கள் அரசுக்குத் தெரியாத கள்ள உற்பத்திகளில் ஈடுபட்டிருக்கலாம். ஆனால் யூனியன் கார்பைடு போன்ற மக்களைக் கொன்று பணத்தை அள்ளும் பகாசுரப் பன்னாட்டு நிறுவனங்கள் எதுவும் இங்கு கிடையாது. சுமார் நூறு பன்னாட்டு நிறுவனங்களின் பிடியில் இன்று உலகப் பொருளாதாரம் மட்டுமல்ல உலக அரசியலே சிக்கியிருக்கிற உண்மையை யாரும் மறுத்துவிடமுடியுமா? கல்வி/மருத்துவம் போன்ற அடிப்படை வசதிகள் அனைவருக்கும் வழங்கப்படுதல், ஒப்பீட்டளவில் பெண்கள் விடுதலை பெற்றிருத்தல் ஆகிய அம்சங்களில் பு. பி. சமூகங்களின் சாதனைகளை ஏ. என். சிவராமன் போன்ற மார்க்சிய எதிரிகள் கூட மறுக்கத் துணிந்ததில்லையே.

நுகர் பொருள் உற்பத்தியின் அடிப்படையிலும் கூட மையப்படுத்தப்பட்ட திட்டமிடுதலைக் காட்டிலும் சந்தைப் பொருளாதாரத்தை மேலாக வைத்துவிட முடியாது. முதலாளியம் நுகர் பொருள் உற்பத்தியில் முன் நிற்கிறது என்பது உண்மைதான். ஆனால் அது நுகர் பொருளை உற்பத்தி செய்வதோடு நிற்கவில்லை. நுகர் பொருள் பண்பாடு ஒன்றை உருவாக்குவதற்காக விளம்பரங்கள் மூலமாகவும் வேறு வழிகளிலும் பல்லாயிரம் கோடி டாலர்களை ஆண்டுதோறும் விரயமும் செய்து கொண்டிருக்கிறது. பரிமாற்ற மதிப்பு அதிக அளவில் இருந்த போதும் பயன் மதிப்பு சுழியாக உள்ள கோடானு கோடி நுகர் பொருட் குப்பைகளை உற்பத்தி செய்து குவிக்கும் ராட்சத எந்திரமாக இன்று முதாளியம் சீரழிந்திருக்கிறது. இந்த உற்பத்தியை நிறுத்திவிட்டு ஒரு நிமிடம்கூட இன்று அது உயிர் வாழ்ந்துவிட முடியாது. மனித உறவுகளை வெறும் பண்ட உறவுகளாகச் சீரழிக்கும் எந்தப் ''பண்ட மாயையை'' ஒழித்துக் கட்டுவதை ஒரு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



புதிய மனிதனின் தோற்றத்துக்கான நிபந்தனையாக மார்க்சியம் நிறுவியதோ அந்தப் பண்ட மாயையை ஒரு அளவு கோலாக வைத்துக் கொண்டு இன்று முதலாளியத்தின் 'வெற்றியை' நாம் தீர்மானித்து விட முடியாது. விற்பனையில் லஞ்சம், பெரு முதலாளிகளுக்கு வரிச் சலுகை, பெருநிறுவனங்களுக்கு அரசு மான்யம், பல நிறுவனங்கள் மூடப்படுதல், தானியங்கி எந்திரங்கள் புகுத்தப்படுவதன் மூலமாக ஏராளமானோர் வேலை இழத்தல், வளர்ச்சி என்ற பெயரில் சுற்றுச் சூழல் நாசம், போர்வெறிக்குக் காரணமான ஆயுதத் தளவாட உற்பத்தி இவை எல்லாம் சேர்ந்ததுதான் இன்றைய முதலாளியம். ஏகாதிபத்தியக் கால கட்டத்திலான இன்றைய முதலாளியம் அதன் தோற்ற காலத்தியச் சனநாயகத் தன்மைகளை எல்லாம் இழந்து தனது சுய உருவை வெளிப் படுத்திக் கொண்டு நிற்கிறது. இன்றைய நிலைமை நீடித்தால் இன்னும் சில பத்தாண்டுகளில் உலக மக்களில் பெரும்பான்மையோர் உற்பத்தியில் எந்தப் பங்குமின்றி அந்தந்த நாட்டு அரசுகள் வழங்கும் உணவுப் பொட்டலங்களையும் பண்டிகைத் துணிகளையும் நம்பிக் கையேந்திக் கிடக்கும் செயலூக்கமற்ற மந்தைகளாக மாறுவது உறுதி என அறிஞர்கள் எச்சரிப்பது குறிப்பிடத்தக்கது.

இன்னொன்றையும் நாம் இங்கு இணைத்துப் பார்க்க வேண்டும். அத்தியாவசியப் பொருட்கள் மற்றும் நுகர் பொருள் உற்பத்தியில் தேக்கம் என்பது பு. பி. சமூகங்களின் மிகப் பெரிய தோல்வி என நாம் ஏற்றுக் கொள்ளும் போதே இதற்கான காரணங்களை மையப்படுத்தப்பட்ட திட்டமிடுதலிலும் மார்க்சியத்தின் அடிப்படையிலும் மட்டுமே தேடிவிட முடியாது என்பதையும் சொல்லியாக வேண்டும். நுகர் பொருள் உற்பத்தியில் தேக்கத்தைச் சந்தித்துள்ள ரசியாதான் ஆயுத உற்பத்தியிலும், விண்வெளி ஆய்விலும் மிக வளர்ச்சியடைந்த பல ஏகாதிபத்தியங்களுடன் ஒப்பிடத்தக்க அளவில் முன்னேறியிருக்கிறது. எனவே இன்றையப் பொருளாதாரத் தேக்கத்திற்கான காரணத்தை மூலதன ஒதுக்கீடு மற்றும் ஆய்வுகளில் முன்னுரிமை அளிப்பது உட்பட மேலும் பல அம்சங்களில் தேட வேண்டியிருக்கிறதே யொழிய இந்த அடிப்படையில் சோசலிசக் கட்டுமானத்திற்கும் மார்க்சியத்திற்கும் கல்லறை வாசகங்கள் எழுதுபவர்களை நாம் வரவேற்றுவிட முடியாது.

நீண்ட நாட்களுக்கு முன்பாகவே ஆஸ்கார் லாங்கே போன்றவர்கள் நுகர் பொருள் தேவையை ஈடுகட்டும் உற்பத்திச் சமநிலையை அடைவதற்கு உற்பத்திச் சாதனங்கள் தனியார்

## இந்தியாவைக் காப்பவர்கள்

இந்தியர் இல்லாவிட்டால்
யாருக்குக் கடவுளை விற்பது?

இந்தியர் இல்லாவிட்டால்
யாரிடம் ஓட்டு வாங்குவோம்?

இந்தியர் இல்லாவிட்டால்
யாரிடம் லீலை செய்வோம்?

இந்தியர் இல்லாவிட்டால்
யாரிடம் கிட்னி பறிப்பது?

இந்தியர் இல்லாவிட்டால்
யாரைத்தான் மிதித்து மகிழ்வது?

இந்தியர் இல்லாவிட்டால்
எங்கட்குச் சந்தை ஏது?

இந்தியர் நமக்குத் தேவை.
இந்தியாவைக் காப்போம்.

—நீலமணி

□ □ □

உடமையில் இருப்பதும் லாபத்தை உச்சமாக்குவதும் அவசிய நிபந்தனைகளாக இருக்க முடியாது என்பதைக் கோட்பாட்டு ரீதியாக நிறுவியுள்ளனர். சில வரையறுக்கப்பட்ட விதிகளைப் பின்பற்றுவதொன்றே தேவை/உற்பத்திச் சமநிலை பெறுவதற்குப் போதும் என்பது லாங்கேயின் கருத்து. மருத்துவம், கல்வி, பொதுநலன் போன்றவற்றை மையப் படுத்துகிற நீண்டகால வளர்ச்சிக்கான முதலீடுகள் எவ்வாறு அமைய வேண்டும் என்பதை நிஜமான அல்லது நிழலான சந்தைச் சக்திகளின் செயல்பாட்டின் அடிப்படையில் தீர்மானித்துவிட முடியாது என்பதை மார்க்சியப் பொருளாதார அறிஞர் மாரிஸ்டோப் கோட்பாட்டு ரீதியாக நிறுவியுள்ளார். டோப்,லாங்கே போன்றோரின் சிந்தனைகள் புரட்சிக்குப் பிந்திய சமுதாயங்களில் முறையாகக் கடைபிடிக்கப்படவில்லை என்பதுதான் குறைபாடே யொழிய இத்தகையக் கோட்பாடுகளை இன்று வரை எந்த முதலாளியப் பொருளாதார நிபுணரும் கோட்பாட்டு ரீதியாகவும் தர்க்க அடிப்படையிலும் மறுத்ததில்லை என்பதை முதலாளியத்திற்கும் கோர்ப்பசேவியப் பொருளாதாரச் சீர்திருத்தங்களுக்கும் வக்காலத்து வாங்குவோர் மறந்துவிடலாகாது. தவிரவும் குறிப்பிட்ட பொருளாதாரத் திட்டங்களை மதிப்பீடு செய்வதற்குச் சந்தை விலைகளை ஒரு அளவுகோலாகப் பயன்படுத்த முடியாது என நவீன முதலாளியப் பொருளாதார நிபுணர்கள்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கூறுகின்றனர். மூலதன மற்றும் கச்சாப் பொருட்களின் பற்றாக்குறையைச் சந்தை விலைகள் சரியாகப் பிரதிபலிப்பதில்லை என்பதால் அவற்றை விட்டுவிட்டு கணக்கிடப்பட்ட விலைகளைக் கொணடு மதிப்பிட வேண்டும் என்பது அயான்லிட்டில் போன்றோரின் வாதம். வேறு வார்த்தைகளில் சொல்வதானால் மூலதனத் திரட்டல் மற்றும் முதலீட்டு ஒதுக்கீடுகளுக்கு மேலை முதலாளியம் சந்தை விலைகளைப் புறக்கணிக்கத் தொடங்கியிருக்கிற அதே நேரத்தில் பு. பி. சமுதாயப் பொருளாதார நிபுணர்களும், பெரிஸ்த்ரோய்க்கா ஆதரவாளர்களும் 'திறமையான' மூலதன ஒதுக்கீட்டிற்குச் சந்தை விலைகளைச் சரணடைகின்றனர். சனநாயக உரிமைகளையும் சந்தைப் பொருளாதாரத்தையும் சயாமிய இரட்டையர்களாக முன் நிறுத்துகின்றனர். இவர்களிடம் தங்கள் நாட்டுப் பிரச்சினைகள் குறித்த பட்டியல் இருக்கிற அளவிற்கு அவை குறித்த முறையான ஆய்வுகளில்லை என்பதை நாம் கவனிக்க வேண்டும்.

ஒன்றை நாம் நினைவூட்டிக்கொள்ள வேண்டும். சந்தை என்பது உற்பத்திப் பொருட்களின் சந்தை மட்டுமல்ல. மூலதனச் சந்தையையும், உழைப்புச் சந்தையையும் உள்ளிட்டது தான் சந்தைப் பொருளாதாரம். அரசியலின் ஆணையிலிருந்து உற்பத்தியை விடுதலை செய்து சந்தையின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருவது என்பது லாபத்தை முன்னிறுத்தித் தொழிற்சாலை/நிறுவனங்களின் தேவையை நிர்ணயிப்பது, வேலை இல்லாப் பட்டாளம் ஒன்றை உருவாக்குவது, ஊக்க ஊதியம், ஒப்பந்த வேலை, பணவீக்கம், விலைவாசி உயர்வு, மருத்துவம், கல்வி ஆகியவற்றை வணிகமயப்படுத்துவது ஆகியவற்றோடு இணைந்ததேயாகும். ஏற்கனவே இவை அனைத்தும் பு. பி. சமுதாயங்களில் எதார்த்தமாகிவிட்டன. போலந்தில் 'சீர்திருத்தத்தை' யொட்டி நாலு லட்சம் தொழிலாளர் வேலை இழப்பர் என எதிர்பார்க்கப்படுகிறது. இது பத்து லட்சமாக உயரும் எனச் சர்வதேச நிதி நிறுவனம் மதிப்பிட்டுள்ளதாக அந் நாட்டின் தொழிலாளர் அமைச்சர் ஜேசக்குரான் கூறுகிறார். பணவீக்கம் அங்கே 1000 சதத்தைத் தாண்டிவிட்டது என்கிறார்கள்! நுகர் பொருட்களின் விலை 50 சதம் வரை ஏறிவிட்டது. ஒரு சோற்றுப் பதமாகச் சிலவற்றை மட்டுமே இங்கு குறிப்பிட்டுள்ளேன். டெங்கின் சீனம் உட்பட முதலாளியச் சீர்திருத்தங்களை விரும்பி ஏற்றுக் கொண்ட பு. பி. சமுதாயங்கள் அனைத்தின் கதியும் இதுதான் என்பதற்கு ஏராளமான புள்ளி விவரங்கள் தினந்தோறும் பத்திரிகைகளில் வருகின்றன. பொருளாதாரத் துறையில் எத்தகைய நெருக்கடிகளிலிருந்து மீள்வதற்காகக் கோர்ப்பசேவ் சீர்திருத்தங்களைக் கொண்டு வந்தாரோ அவை அந்த நெருக்கடிகளை மேலும் தீவிரப்படுத்தியுள்ளன என்பது சமீபத்திய செய்தி.

பு.பி. சமுதாயங்களில் மேற்கொள்ளப்படும் முதலாளியச் சீர்திருத்தங்கள் பற்றி ஒரு வார்த்தை. இந்தச் சீர்திருத்தங்கள் கோர்ப்பசேவின் கண்டுபிடிப்பல்ல. தனியார் வணிகம், ஊக்க ஊதியம், சந்தைச் சக்திகளுக்கு அனுமதி போன்ற முதலாளியப் பின்வாங்கல்கள் மூலம் நெருக்கடிகளைச் சமாளிப்பது என்பதன் வரலாற்றை நாம் லெனினின் 'புதிய பொருளாதாரக் கொள்கை'யிலிருந்து தொடங்க வேண்டும். அங்கேரி (ஜேனஸ்காடரின் புதிய பொருளாதாரச் செயற்பாடு—1968), கியூபா, யூகோஸ்லாவியா, போலந்து, குருச்சேவ் காலத்து ரசியா, டெங்கின் சீனம், வியட்நாம் ஆகிய அனைத்தும் 1960 களில் தொடங்கி இத்தகைய சீர்திருத்தங்களை மேற்கொண்டு வருகின்றன. பன்னாட்டு நிறுவனங்களுக்கு அனுமதி, சர்வதேச நிதி நிறுவனங்களில் உறுப்பினராவது உட்பட இதில் அடக்கம். இந்தச் சீர்திருத்தங்களை ஐ. நா. சர்வதேச நிதி நிறுவனம் போன்ற முதலாளிய அமைப்புகளைச் சேர்ந்தோர் உட்படப் பலர் மதிப்பீடு செய்துள்ளனர். இவை அனைத்துமே முதலாளியச் சீர்திருத்தங்கள் என்பனப் பு.பி. சமுதாயங்களின் நெருக்கடிகளை மேலும் தீவிரப்படுத்தியுள்ளன என்றே கூறுகின்றன. மையப்படுத்தப்பட்ட திட்டமிடுதலின் கொடையாகிய சகலருக்கும் அடிப்படை வசதிகள் என்பது ஒழிக்கப்படுதல், வேலை இல்லாத் திண்டாட்டம், பண்பாட்டுச் சீரழிவு, மக்களின் அதிருப்தி அகியவையே இச் சீர்திருத்தங்களின் விளை பொருட்களாக இருந்துள்ளன என்பதை ஜாய்ஸ் கோல்கோ போன்றோரின் ஆய்வுகளும் நிறுவியுள்ளன. அதிகாரப் பரவல் என்பது மேலாளர்களின் அதிகாரக் குவியலுக்கு வழிவகுத்தது. தொழிலாளர் மேலும் அந்நியப்பட்டனர். முழுமையான மையப்படுத்தப்பட்ட திட்டமில்லாமல் முழுமையான சந்தைப் பொருளாதாரச் செயற்பாடும் இல்லாமல் இரண்டுங்கெட்டானாகி விரயங்கள் அதிகமாயின. உலக முதலாளிய நோக்கியான முதலீடு என்பது உள்நாட்டுத் தேவைகளை அலட்சியப்படுத்தியது. இவை அனைத்தும் நம் கண்முன் நடந்தேறியவை தான்.

பெரிஸ்த்ரோய்க்காவாதிகள் இந்த வரலாற்றை மறந்தாலும் மக்கள் எப்படி மறப்பார்கள்? மேலை முதலாளியக் கவர்ச்சியில் கிளர்ந்தெழுந்து உள்நாட்டுக் கொடுங்கோன்மையைத் தூக்கி எறிந்த பு. பி. சமுதாய மக்கள்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கொஞ்சம் கொஞ்சமாய் இந்த வரலாற்றைத் திரும்பிப் பார்க்கத் தொடங்கியுள்ளனர். போலந்தில் 'சாலிடாரிடி' அமைப்புக்கு மக்கள் ஆதரவு குறைந்துவிட்டது என்கிறார்கள். தொழிலாளர் நலன்களைக் காட்டிக் கொடுத்து விட்ட அமைப்பாகச் 'சாலிடாரிடியைத்' தொழிலாளர்கள் குற்றம் சாட்டத் தொடங்கியுள்ளனர் என ஆய்வுகள் கூறுகின்றன. பொதுவுடமைக் கட்சியின் தலைமையிலான தொழிற்சங்கத்தில் 'சாலிடாரிடி'யைக் காட்டிலும் மூன்று மடங்கு உறுப்பினர் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. வேலையில்லாத் திண்டாட்டம், விலைவாசி ஏற்றம் ஆகியவற்றை ரசியர்கள் உட்படப் பல பு.பி. சமுதாய மக்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. தாங்கள் ஏற்கனவே பெற்றிருந்த சுயச் சார்பை இழந்து மீண்டும் முழுமையாக ஆணாதிக்கத்திற்கு ஆட்பட நேருமோ எனக் கிழக்கு ஜெர்மனியப் பெண்கள் கவலைப்படத் தொடங்கியுள்ளனர் எனப் பத்திரிகைகளில் செய்திகள் பார்க்கிறோம். வேலை இல்லாத் திண்டாட்டத்தின் விளைவாக முதலில் பாதிக்கப்படுபவர் பெண்கள் தான். குழந்தைக் காப்பகங்கள் முதலியவற்றை அரசு மூடிவிட இருப்பதால் மீண்டும் மரபு வழிப்பட்டக் குடும்பப் பொறுப்புக்களைப் பெண்கள் மட்டுமே சுமக்கப் போவது குறித்த அச்சம் அவர்கள் மத்தியில் வேர்விட்டு இருக்கிறது.

பு.பி. சமுதாயங்களில் ஏற்பட்டுள்ள நெருக்கடிகள் சோசலிசக் கட்டுமானம், மார்க்சியம் ஆகியவை காலாவதியாகிவிட்டன என்ற கூற்றிற்குச் சான்றாக முடியாது என்பதற்கு இவைகளெல்லாம் ஆதாரமாகின்றன. அப்படியானால் பு.பி. சமுதாயங்களில் ஏற்பட்டுள்ள நெருக்கடிகளின் பொருளென்ன? பாட்டாளி வர்க்கச் சர்வாதிகார (பா.வ.ச.) அரசுகள் இப்படி மக்களிடமிருந்து அந்நியப்பட்டிருப்பதன் அர்த்தமென்ன? எதுவுமே இந் நாடுகளில் காலாவதியாகிவிடவில்லையா? இந்தக் கேள்விகளுக்குப் பதிலை அடைய நாம் சோசலிசக் கட்டுமானமாக அறியப்பட்டிருந்த அம்சங்களை மறு பரிசீலனை செய்வதிலிருந்து தொடங்க வேண்டும். □

[சென்ற இதழில் இக்கட்டுரையில் 'போல்ஷிவிசம்' என்பது போல்ஸ்சௌசம் என தவறாக அச்சாகியிருந்தது. தவறுக்கு வருந்துகிறோம்: —ஆசிரியர்குழு.

—தொடரும்

## உயிர்கிளர்ந்த கணங்களில்...

குரலெடுப்பில் மண்ணின் இருப்பு:
சொற்சுழலில் வாழ்வின் கசிவு;
கால்பதிவில் செயலின் விளைச்சல்.

போர்ப்பறை சுடரும் சலங்கையில்;
துப்பாக்கி மணக்கும் தோள்களில்.

எதிரியே!
நாக்குகள் ஒடிப்போம்;
நரம்புகள் பிய்ப்போம்;
குருதித் திமிர் அடக்கு.
மடைகளின் உடைப்பு உறுதி.

காற்று நடக்கும்
வெளியெங்கும் உரவிதைகள்.

வெறுமைகள் நிரப்பிப் படரும் கொடிகள்
மின் அனல் ஊட்டும் தளிர்கள்.

ஒலிகளில் மனசு நிமிரும்.
நரம்புகள் தினவும்; கைகள் முறுக்கும்.

அசைவுகளில்
உயிர்கிளர்ந்த உணர்வுகள்
சிலிர்த்து மோதும்; பரவும்.

(புரட்சிக் கலைஞர் கத்தர், ஆகஸ்டு மாதம் தமிழ் நாட்டில் சுற்றுப் பயணம் மேற் கொண்ட போது, முதன் முதலாக அந்நிகழ்ச்சியைக் கண்டபோது, மனதில் ஏற்பட்ட வெளிப்பாடு)

—இளமுருகு

## புதிய நாள் வரும்

சதுப்பு நிலம் தேடிவந்த
சைபீரியக் கொக்கே
கோடியக் கரை காடுகளில்
குந்தியிரு, அது போதும்.

தெற்கே ஒரு போர் நடக்குது
போகாதே நீ
அந்தப்பக்கம்.

பொல்லாத சிங்களன் வீசுவான்
குண்டுகள் வானத்திலிருந்து
சிறகுகள் கருகி விடும்
வெப்பக் காற்றில்
நெஞ்சம் பொசுங்கி விடும்.

எட்டாத உயரத்தில் நீ பறந்தாலும்
ஈழத்தாய் பாடும் சோக கீதம்
உன் காதில் விழும்
உள்ளம் கலங்கும்.

போதி மரத்தடி புற்றுகளில்
புறாவை விழுங்கும் நாகங்கள்
போய் விடாதே நீ
அந்தப் பக்கம்.

புதிய நாள் ஒன்று
போருக்குப் பின் வரும்
அமைதி தவழும் காடுகளில்.
அப்போது நீ போகலாம்
அந்தப்பக்கம்.

—கனிவண்ணன்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தி. சுதாகர்

# நாட்கள்

அந்த லாட்ஜின் மேல்மாடியில் இருக்கும் கடைசி அறையில் இவள் படுத்து இருந்தாள். வெறுமனே கண்களை மூடிக் கொண்டு கிடந்தாள். தூக்கமும் வருவதில்லை. தூங்க முயற்சி செய்தாலும், துளிகூட தூக்கம் வருவதில்லை. இப்படி சும்மா படுத்து இருக்கும்பொழுது பேச்சு துணைக்கு யாராவதுகூட இருந்தால் நன்றாயிருக்கும் என்று நினைத்தாள். இப்படி தனியாய் இருப்பது இவளுக்கு ஒன்றும் புதிதல்ல. ஒவ்வொரு மாதமும் இந்த நாட்களில் இவள் இப்படி தனியாக இருக்க நேர்ந்து விடுகின்றது. இப்படியே தனியாக படுத்து இருப்பது சந்தோஷமாக இருப்பதுபோலவும் தோன்றும். சில சமயங்களில், அடுத்த கணமே இன்னும் இத்தனை நாட்கள் இப்படி அடைந்து கிடக்க வேண்டுமே என்று சலிப்புஎழும். இங்கிருக்கின்ற மற்ற பெண்களுக்கு இம்மாதிரி நேர்ந்து விடுகின்ற பொழுது சொல்லி வைத்தாற்போல் இரண்டுபேர் இருப்பார்கள். ஏன் போன மாதம் மூன்றுபேர்கூட இருந்ததாக ஞாபகம். இவளை மாதிரி தனியாக இருக்க மாட்டாமல் பேசிக் கொண்டும் மெல்லியதாக சிரித்துக் கொண்டும் இருப்பார்கள். இவளுக்கு மட்டும் அவர்களுடன் இருக்கும் வாய்ப்பு கிடைத்ததில்லை. இவளும் எவ்வளவோ நாட்கள் என்று கணக்குப் பண்ணி பார்த்தாலும் அவர்கள் மாதிரி இன்னொருத்தியுடன் இந்த அறையில் கலகலப்பாக இருக்கும் வாய்ப்பு கிடைக்காமல் போய்விடுகிறது. அவர்களுக்கு சந்தோஷமாக இருந்தாலும்கூட, ஒரே சமயத்தில் இரண்டு மூன்று பேர் இருந்தால் ஓனர் சுப்பராயலு முகத்தில் சிரிப்பே இருக்காது.

''போச்சு, நாலு நாளைக்கு ஒண்ணும் சில்லரை அகப்படாது'' என்று அலுத்துக் கொள்வார். அவருக்கும் கொஞ்சம் அலுப்பு வரட்டுமே என்றுதான் இவள் நினைப்பாள். வெறும் பாயில் படுத்து இருந்தவளுக்கு முதுகு உறுத்தியது. முன்பு இந்த அறையில் கட்டில் இருந்ததை பார்த்து இருக்கின்றாள். ஆனால் அது இப்பொழுது இல்லை. இந்த அறைக்கு வரும் நாட்களில்தான் அவர்களால் ஏதும் சம்பாதிக்க முடியாதே; பிறகு கட்டில் என்னத்துக்கு? சும்மா படுத்து கிடப்பதற்கு என்று சுப்பராயலு நினைத்திருக்க வேண்டும். இவள் காலை நீட்டி முகத்தை கதவுப் பக்கமாக வைத்துக் கொண்டு திரும்பிப் படுத்தாள். இந்த அறைக்கு வந்தவுடன் எல்லாமே இங்கு இவளை தேடிக்கொண்டு வரும், டீ முதல் சாப்பாடுவரை. மற்ற நாட்களில் சுப்பராயலு அறையில் சென்று ஒவ்வொன்றுக்கும் சொல்ல வேண்டும். எல்லோரும் ஒன்றாக உட்கார்ந்து 'ராஜவிலாஸ் ஓட்டலில் திருடியது'' என்று பொறிக்கப் பட்டிருக்கும் அந்தப் பித்தளை கேரியரில் இருக்கும் விதை விதையான சாதத்தை சாப்பிடும் பொழுது இன்னதென்று சொல்லமுடியாத துக்கம் தொண்டையை அடைத்துக் கொள்ளும். சிலசமயங்களில் அந்தநேரம் பார்த்து யாராவது ''ரூம்'' வேணும் என்று வருவார்கள். சாப்பிடுகிறவர்கள் சாப்பிட்டு முடிக்கட்டும் என்று வருபவர்கள் யாரும் சொல்வதில்லை. அவர்கள் அப்படி கூறினாலும் சுப்பராயலு விடமாட்டார்.

''நமக்கு கஷ்டமர்தான் முக்கியம்'' என்பார். வெளியில் யாராவது கூட்டிச் சென்றால்தான் நல்ல சாப்பாட்டை பார்க்க முடியும். அதுவும் அவர்கள் பிரியப்பட்டு வாங்கிக் கொடுத்தால் தான்.

காலையில் இருந்தே யாரும் இந்தப்பக்கம் வரவில்லை. பெரும்பாலும் வரமாட்டார்கள். ஒரு ஆள் குறைந்தால் அதை ஈடு செய்து சம்பாதிக்கவே முனைவார்கள் இங்குள்ள பெண்கள். சுப்பராயலுவும் ரொம்ப முனைப்பாக இருப்பார். வெளியில் கூட்டிச் செல்லும் நபர்களிடம் வழக்கத்துக்கு அதிகமாக பணம் கேட்பார். வந்தவர் கொடுத்தால் புதியவர் என்று அர்த்தம், கொடுக்க மறுத்தால் முன்பே இங்கு வந்திருக்கிறவர் என்று தெரிந்து கொள்ளலாம்.

சாத்தி இருந்த கதவின் பின் யாரோ நடந்து செல்லும் ஓசை கேட்டது. எஸ்தராகத்தான் இருக்கவேண்டும். பாத்ரூம் செல்லுகிறாள். கொஞ்சநேரம் முன்பு இவள் கதவருகில் வந்து நின்றபொழுது ஐந்தாம் நம்பர் அறையினுள் ஒருவனுடன் எஸ்தர் நுழைவதைக் கண்டாள். ஒருமணி நேரமாவது ஆகிஇருக்கும். எப்படியும் இருபது, முப்பது ரூபாய் ''படிக்காசு'' வாங்கி இருப்பாள். இங்கு இருப்பவர்களிலே மிகவும் கைகாரியும் தைரியமானவளும் இந்த எஸ்தர் தான். ஆனால் நாம் ஏதாவது சொன்னால் மிகச் சீக்கிரத்திலேயே அழுது விடுவாள். பேசக் கூடாத வார்த்தையெல்லாம் பேசுவாள். புதிதாக வரும் பெண்கள் தயங்கினாலும், அழுதாலும் உபதேசம் செய்வது எஸ்தர்தான். ஒரு நாளைக்கு இருபது தடவையாவது 'சேசுவே' என்பாள். எஸ்தரைப் பார்ப்பதற்கு கொஞ்சம் வயதான மாதிரி இருக்கும். ஆனால் அவளுக்குத்தான் அதிக கஸ்டமர்ங்களைத் தெரியும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



''என்ன ரொம்பநாளா காணலை'' என்பாள் உரிமையோடு. வருகின்றவர்கள் இவ்விசாரிப்பிலே மகிழ்ச்சி அடைந்து விடுவார்கள் என்று முகமே சொல்லும். ரெய்டுக்கு வரும் போலீஸ்காரர்கள்கூட எஸ்தரிடம் கனிவாகப் பேசுவது போல் இருக்கும். ஓனர் சுப்பராயலுவை எதிர்த்துப் பேசும் ஒரே நபர் இவள்தான். அடிக்கடி சண்டைகூட போடுவாள்.

அறைக்கதவு லேசாக திறந்தது. இவள் தலையை எட்டிப் பார்த்தாள். எஸ்தர்தான். ஈரக்காலை வாசல்படியில் இருந்த கிழிந்து போன சாக்கில் துடைத்துக் கொண்டிருந்தவள், இவளைப் பார்த்து சிரித்தாள். பாதி உள்ளே நுழைந்தும் நுழையாததுமாய் கதவருகில் நின்றவள் கேட்டாள்—

''என்னா, தூக்கமா''?

''இல்ல, தூக்கம் எங்க வருது''?

''நா டீ சொல்லலாம்னு இருக்கேன். ஒனக்கு வேணுமா''

வேணா, எவ்வளவு கெடச்சுது? என்றாள்

''ஆமா, எவன் நீட்டுறான் எடுத்து, 'அங்க வேற கொடுத்துட்டு இங்க வேறயா' அப்படின்னான்''

''காசு எடுத்தாத்தான் எல்லாம்னேன், இருபது ரூபா கொடுத்தான்.'' இருபது ரூபாய் இவளைப் பொறுத்தமட்டில் அதிகம்தான். ஆனால் எஸ்தருக்கு அது மிகவும் குறைவாகவே இருக்கவேண்டும் என்று அவள் முகத்தோற்றமே சொல்லியது. இவளிடம் வருகிறவர்களிடம் காசு வாங்கும் திறமை இல்லை. அவர்களாக குடுத்தால் வாங்குவாள். இவளாகவே கேட்க மாட்டாள். தான் மிகவும் அப்பாவியாக இந்த காசுவாங்கும் விஷயத்தில் இருப்பதாக மற்றவர்கள் சொல்லுவார்கள். ஆனால் இவள் அதைப் பற்றி எதுவும் எண்ணுவதில்லை. ஆனால் யாரும் இவளுக்கு காசு தராமல் சென்றதில்லை என்ற ஞாபகமும் வந்தது. எங்கெங்கோ இருக்கின்ற ஊர்களில் இருந்து வரும் பெண்கள் இம்மாதிரியான இடங்களை தேடிப்பிடித்து வந்து விடுகின்றனர். புதிய ஊரும், புதியமனிதர்களும் கொஞ்சம் தயக்கமாய்த்தான் இருக்கும் ஆரம்பத்தில். ஒருவருடன் ஒருவர் அதிகம் பேசிக் கொள்ள மாட்டார்கள். அதிகபட்சம் சிரிப்புக் கூட இருக்காது. நாளாக நாளாக பழகிக் கொள்வார்கள், மிஞ்சினால் இரண்டு அல்லது மூன்று மாதம் இருப்பார்கள் பின்பு வேறு ஊர் போய் விடுவார்கள். எந்த ஊரில் இம்மாதிரி நடக்கின்றது என்றும் அவர்கள் இங்கு வருவதற்கு முன்பு எங்கிருந்தார்கள் என்றும் விசாரித்துக் கொள்வார்கள். இவளிடமும் எடுத்தவுடன் யாரும் சகஜமாகப் பேசிவிடவில்லை. நாலாம் நம்பர் ரூமில் ஒரு மதிய நேரத்தில் எல்லோரும் ஒன்றாக உட்கார்ந்து இருந்தபொழுது இந்த எஸ்தர்தான் இவளைப் பார்த்துக் கேட்டாள். எல்லோரிடமும் இருந்து சிறிது விலகி, பச்சை டிஸ்டம்பர் அடித்திருந்த சுவற்றின் மீது சாய்ந்து இருந்த இவள் கொஞ்சம் முன்னுக்கு வந்து எஸ்தரைப் பார்த்தாள்.

''எந்த ஊரு? எஸ்தர்''

''தஞ்சாவூரு''

''தஞ்சாவூரா, அங்கிட்டு எங்க''?

''பூக்காரத் தெரு''

நெஜம்மாவா என்று கேட்டாள். அவள் இப்படி கேட்டபொழுது அவள் கண்கள் அகல விரிந்து சுருங்கியது.

''இதுல பொய்சொல்றதுக்கு என்ன இருக்கு'' என்றாள்.

''இல்ல, செலது ஊரு, பேரு, எல்லாத்தியும் மாத்தி சொல்லுங்க, அதாங் கேட்டேன்'' என்றாள்.

எஸ்தரும் உண்மை பேசுபவளாகத்தான் இருக்க வேண்டும் என்று நினைத்தாள். மற்றப் பெண்கள் எல்லோரும் இவளிடம் பேசினார்கள். அவர்களின் பேச்சு ஒவ்வொருவரும் தங்களின் கடந்த கால வாழ்க்கையை மறப்பதிலேயே குறியாய் இருக்கிறார்கள் என்று நினைக்கத் தோன்றிற்று. எல்லோரிடமும் ஒருவிதமான அலுப்பு இருந்தது. அந்த அலுப்பு, எதனால், எதற்கு, யாரால் என்று விவரித்து சொல்ல முடியாத அளவுக்கு அடிபட்டு இருந்தார்கள்.

எஸ்தர் கதவை சாத்திவிட்டுப் போய்விட்டிருந்தாள். கீழே சுப்பராயலு குரல் கேட்டது. சுப்பராயலுவைப் பார்த்தால் யாரும் இந்த மாதிரி பொம்பளையை வைத்து பணம் பண்ணும் ஆசாமி என்று சொல்லமாட்டார்கள். மனிதர் மிக சாது மாதிரி இருப்பார். வெள்ளை வேட்டியும் சட்டையும்தான் அணிவார். அதுவும் அவ்வளவு மொரட்டு வெள்ளை சட்டைத் துணி எங்கிருந்துதான் எடுப்பாரோ தெரியாது, போதாக்குறைக்கு அதை சலவைக்கெல்லாம் போட்டு மேலும் முரட்டுத்தனத்தை அதில் கூட்டுவார். அவர் அறையில் சாமி படங்கள் நிறைய இருக்கும். உருவத்திற்கும், செயலுக்கும் மிகுந்த வேறுபாடுகள் உண்டு என்பதை சுப்பராயலுவைப் பார்த்தமட்டில் தெரிந்து கொண்டாள். சாமிகும்பிடும் சுப்பராயலுவின் நினைப்புதோன்றியவளுக்கு, இரண்டாம் நம்பர்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அறையில் இவள் ஒருவனுடன் இருந்தபொழுது அங்கிருந்த சாமிகாலண்டரைப் பார்த்து வந்திருந்தவன் ''இங்கெல்லாம் சாமி என்னத்துக்கு'' என்று சிரித்துக் கொண்டு கேட்ட நினைவும் வந்தது. சும்மா இருக்கின்ற நேரங்களில் ஒன்றைப் பற்றி நினைக்கும் பொழுது அதன் தொடர்புடையதாக ஏதாவது ஒன்றும் அதன் தொடர்ச்சியாக நினைவுக்கு வந்துவிடுகிறது.

''நாளைக்கு காலம்பர வந்துடும் உங்களுக்கு'' சுப்பராயலு குரல் கொஞ்சம் சத்தமாகக் கேட்டது. பதில் குரல் அவரைவிட சத்தமாக எழும்பியது. வழக்கமாய் வரும் கான்ஸ்டபிளின் குரல்தான். மாமூல் வாங்குவதற்கு வந்திருக்கிறார்.

''இங்கபாரு சுப்பு, வந்துருக்குறது புது எஸ். ஐ, ஒன் ஐசா பைசா வேல எல்லாம் வேணாம். இல்லீன்னாக்கா ரெய்டுதான். ஆமா சொல்லிப்புட்டேன்''. கான்ஸ்டபிளின் குரல் கம்மிவிட்டது, சத்தத்தையே காணோம். சுப்பராயலு காபியோ, கூல்ட்ரிங்க்ஸோ வாங்கி கொடுத்திருக்க வேண்டும். முன்பெல்லாம் ரெய்டுக்கு மிகவும்தான் பயப்படுவாள். இப்பொழுது அங்கிருப்பவர்கள் அத்தனை பேரும் பழக்கமானவர்கள் போல் ஆகிவிட்டது. புதிதாக அவர்கள் இதுவரை இங்குப் பார்க்காத பெண்ணாய் இருந்தால் அடிப்பார்கள்; மெது வாய் லத்தியை ஓங்கி, கால்சதை, தோள்பட்டை, பின்பக்கம் என்று தொடங்கி வேகத்தைக் கூட்டுவார்கள். துணிகளின் மீது அடியின் ஓசை சத் சத் என்று சத்தத்தை எழுப்பும். கூடவே கெட்ட வார்த்தைகளை சொல்லிக் கொண்டேஅடிப்பார்கள். போலீஸ்காரர்களுக்கு தெரியாத கெட்டவார்த்தைகளே இல்லை என்று நினைக்கத் தோன்றும். முன்பு சேலத்தில் இருந்து வந்த பெண்ணை அப்படித்தான் அடித்தார்கள். ஆனால் மறுமுறை ரெய்டு வந்து ஸ்டேஷனில் இருக்கும் பொழுது அவர்கள் பார்க்கும் ஆசை கலந்த திருட்டுப் பார்வையும், பேச்சும் ஆச்சரியமாக இருக்கும்.

இவள் எழுந்து ஜன்னல் பக்கம் வந்தாள். வெய்யில் அவ்வளவாக இல்லை. இரண்டு ஆண்கள் மேல் மாடியையே பார்த்துக் கொண்டு சென்றார்கள். கொஞ்ச தூரம் சென்றதும் இன்னுமொரு தடவை திரும்பிப் பார்த்தார்கள். இன்னும் கொஞ்ச நேரத்தில் இங்கு வந்தாலும் வருவார்கள். கீழே சென்று எஸ்தரிடம் பேசுவோமா என்று நினைத்தாள். எஸ்தர் இன்னேரம் தூங்கி இருப்பாள். இரவில் வெகு நேரம் கண் விழிக்க வேண்டும் என்பதால் இருக்கும். எல்லோரையும் விட அவள்தான் அதிகநேரம் கண்விழித்திருப்பாள். நினைத்த நேரத்தில் ஆட்கள் வரும்பொழுது ஈடுகொடுப்பது எஸ்தராகத்தான் இருக்கும். வருபவர்களை பற்றி எஸ்தர் சொல்லும் கதைகள் சிரிப்பாக இருக்கும், அருவருப்பாகக் கூட இருக்கும். ஆனால் கேட்க வேண்டும் என்ற ஆவலைத் தூண்டிவிடும் அவள் பேச்சின் தோரணை. ''என்னதான் நாம் இப்படி இருந்தாலும், இந்த எஸ்தருக்கு மட்டும் விவஸ்தை இல்லைப்பா'' என்பார்கள் இங்கிருப்பவர்கள்.

எஸ்தர் கூறுவதுபோல் இங்கு வந்து போகின்றவர்களைப் பற்றிச் சொல்ல வேண்டும். என்று இவளும் நினைப்பாள். நினைப்போடு சரி, இது வரையில் யாரிடமும் சொன்னதில்லை எத்தனையோ நபர்கள்; யாரைப்பற்றி இவள் சொல்லுவாள்? இருந்தாலும் ஒருவனின் நினைவு மட்டும் இவளுக்கு தங்கி இருந்தது. வருகின்றவர்களின் விருப்பம்தான் மேலோங்கி இருக்கும், இவளுக்கு என்றுமே விருப்பத்துடன் இயங்க முடிந்ததில்லை. ஆனால் அன்று வந்த அவனிடம் இவளாக ஆதாரத்துடன் நடந்து கொண்டாள். வந்தவனின் முகம் நன்றாக ஞாபகம் இருக்கிறது. திரும்பவும் அவன் இன்று வரை வரவில்லை. ஒரு தடவை பார்த்திருந்தாலும் முகம் மனதில் அப்பிக் கொண்டு விட்டது. போன மாதத்தின் ஒரு இரவு ஏழு மணிக்குத்தான் அவன் வந்தான் சுப்பராயலுவுடன் மேலே வந்த அவன் ஒன்றாக உட்கார்ந்து இருந்த அனைவரையும் பார்த்தான். நிச்சயமாக இவளைவிட அவன் வயது

## இருப்பு நிலை

மீன் மறுத்து
நாரையாய்ப்

பொற்றாமரைத்
தீர்த்தம்

நாடும்
மனம்

சேற்றில்
சிக்கிய

ஒ
ற்
றை
க்
காலை

உதற
முடியாமல்.

—ந. ஜயபாஸ்கரன்

□ □ □

www.tamilarangam.net



மிகவும் குறைவாகத்தான் இருக்கும். விலகி இருந்த எஸ்தரின் தாவணியைப் பார்த்தவன் தலையை தாழ்த்திக் கொண்டான். மிக லேசாக தலையை உயர்த்தி நோக்கி கை காட்டினான். மூணாம் நம்பர் ரூமிற்குள்தான் சென்றார்கள் வேட்டிகளையும் நிறைய கைலிகளையுமே பார்த்திருந்த இவளுக்கு முழுக்கை கோடு போட்ட சட்டை அணிந்து, அதை பேண்ட்டிற்குள் இன்செய்து நாகரிகமாக இருந்த அவனை பிடித்துப் போயிருந்தது. மிகவும் தயங்கினான். வெட்கமும் பட்டான். வெட்கப்படும் ஆண்களை பெண்களுக்குப் பிடிக்கும் என்றுதான் சொல்ல வேண்டும். மிகவும் வித்தியாசமானவன் என்று பார்த்த மாத்திரத்தில் தெரிந்து கொண்டாள்.

''என்னைவிட பெரியவங்களா இருப்பீங்க போல இருக்கு." இவளை மரியாதையாக 'ங்க' போட்டு அழைத்தவன் அவன் ஒருவனாகத்தான் இருக்க வேண்டும். அவனின் கேள்விக்கு பதில் சொல்லியாக வேண்டும் என்ற ஆவல் இவளை மீறியே ஏற்பட்டது.

''பெரியவங்களா இருந்தா என்ன?'' என்றாள். இவளுக்கே ஆச்சரியமாக இருந்தது இவளின் பதில்.

''அவ்வளவா பழக்கம் இல்ல" அவன்.

''அதுதான் முகமே சொல்லுதே" என்றாள். அவன் இவளுக்கு மிக எளிதானவளாகவே இருந்தான். இவள் அவனை நெருங்கினாள். ஒரு குழநதை திசை தெரியாமல் அலைவது போல தவித்த அவனை இவளாகவே இயக்கினாள். மிக ஆதரவான அவனின் கைகள் இவளை அணைத்துப் ''பெயர் என்ன?" என்று காதருகில் கேட்ட பொழுது இவள் அழுதுவிடுவாள் போல் இருந்தது. சொன்னாள். இவள் தன் பெயரை அவனின் உறவினர்களுக்குக் கூட ஒருத்திக்கு இந்தப் பெயர்தான் என்று சொன்னான். அது இவளுக்கு மேலும் இதமாக இருந்தது. அந்த கணத்தில் தன் மீது பிரியத்தை செலுத்தும் ஒரே நபராகவே அவன் இவளுக்குப் பட்டான்.

''ஆமா, ஒங்க அப்பா அம்மாவுக்குத் தெரிந்தால்"?

''அவுங்கல்லாம் இருந்தாத்தானே"

குழந்தைத் தனமான கேள்வியாகத்தான் இருந்தது. இவள் அவனின் முதுகை வளைத்துக் கொண்டிருந்தாள். பெண் பிள்ளைகள் போல் முடி இல்லாத அவனின் கால்களைப் பார்க்கையில் இவளுக்கு சிரிப்பு வந்தது. இவளின் சிரிப்பை கவனித்து, காரணம் என்னவாய் இருக்கும் என்று எண்ணும் அவன் முகத்தைப் பார்ப்பதற்கே சந்தோஷமாக இருந்தது. இவள் கண்களை மூடிக்கொண்டுதான் இருப்பாள். முகங்களை பார்க்க விரும்பாமல் மூடி இருக்கும் கண்களின் முன்னே இருட்டை உணர்வாள். இவளின் நினைவுத் தப்பிப்போன மனிதர்களும், உறவினர்களும் அரூபமாய் இருப்பது போல் இருக்கும். எங்கெங்கோ இருந்த இரவுகள், ஹோட்டல்கள், அழுக்குக் கட்டில்கள். மூட்டைப்பூச்சி உள்ள தலையணைகள், அடித்த போலீஸ்காரர்கள் எல்லாமே இவளின் நினைவுக்கு வருவார்கள். அந்த நினைவுகள் எல்லாம் மறைந்து ஒரு வெறுமையை உணர்வாள். அவன் வந்த அன்று அவள் கண்களை மூடவில்லை. திறந்த கண்களின் இமைகளின் மீது அவன் முத்தினான். எத்தனை மனிதர்கள், பரபரப்பும் பயமும் கலந்தவர்கள், வியர்வை நாற்றம் அடிக்கும் சட்டை அணிந்தவர்கள், வந்தவுடன் கைலியை அவிழ்த்து விடுபவர்கள், உள்ளாடை கூட போடாதவர்கள், சதைப் பகுதிகளை தேடி அலையும் கைகளை உடையவர்கள் இவர்களிலும் இருந்து முற்றிலும் வேறுபாடு உள்ளவனாகவே அவனின் அணுகுமுறை இருந்தது.

''கால நீட்டிக்குங்க எனக்கு முட்டி வலிக்குது என்றான்'' மெல்லியதாக. அவனின் கட்டளை இவளுக்கு பிடித்திருந்தது. எவ்வளவு மென்மையாக கூறினான். அவனின் பிணைப்பு இவளுக்கு தேவையாக இருந்தது. அவன் இவளின் பிடியில் இருந்து லேசாக தன்னை விடுவித்துக்கொள்ள முயற்சி செய்த பொழுது இவள் அவனை விடவில்லை. மெலிந்திருந்த அவனது கீழ் உதடுகளை மிகக் குழைவாகப் பற்றி முத்தம் தந்தாள். சோர்ந்து தன் மீது வீழ்ந்து இருந்த அவனை ஒரு ஆட்டுக்குட்டியை அணைப்பது போல் அணைத்திருந்தாள். உடலும் மனமும் ஆழ்ந்த பிரியத்தை வேண்டும் தருணத்தில் அது யாராக இருந்தால் என்ன என்று இவள் நினைத்தாள். அவனின் பெயரைக்கூட இவள் கேட்டிருக்கவில்லை. தேரிந்தாலும் தனக்குத்தானே உச்சரித்துக் கொள்ளலாம் என்று நினனத்தாள். ஒன்றும் சொல்லாமலே அவன் அன்று வெளியேறினான். அவன் சென்ற பிறகு நீண்ட நேரம் இவள் அழுதாள். எதற்காக அழுதாள் என்று இவளாலே கண்டு பிடிக்க முடியாமல் இருந்தது.

அவன் இப்போழுது வந்தால் கூட இந்த அறையில் வைத்துப் பேசிக் கொண்டிருக்கலாம். ஏன் திரும்ப வரவில்லை. குண்டாகி விட்டிருந்தால் ஏன் குண்டானாய் என்று விசாரிக்கலாம். தான் இப்படி பேசினால் அவனிடம் இருந்து என்ன பதில் வரும் என்றும் நினைத்துப் பார்த்தாள். கதவுக்கு வெளியே நடந்து செல்லும் ஓசை கேட்டது. வெளியில் வந்தாள். முகம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கழுவ சென்று கொண்டிருந்தார்கள். இவளுக்கு டீ குடித்தால் நன்றாய் இருக்கும் என்று தோன்றியது. மாடிப்படி அருகில் லாட்ஜ் பையன்கள் நின்று கொண்டிருந்தார்கள்.

''டேய் முருகேசு''

''என்னக்கா''

''டீ வேணும் வாங்கியாரயா?''

''ம். ஸ்ட்ராங்கா, லைட்டா?''

''எதுனாச்சும்''

''அப்ப லைட்டாவே வாங்கியாரன்''

சந்தோஷமாக படி இறங்கினான். ஒவ்வொரு படி கடத்தலும் இவள் தரப்போகும் அந்த பத்துப் பைசாவுக்காக இருக்குமா என்று நினைத்தாள். இவனெல்லாம் பெரியவன் ஆனால் என்ன செய்வான்? லாரி கிளினர்? அழுக்கு அரை நிஜாரும் பல ஊர்களைப் பார்த்ததால் வளவள என்று பேச்சை உடையவனாகவும் இருப்பானோ? இல்லை சுப்பராயலு மாதிரி இந்த தொழில் செய்பவனாக வருவானோ? எப்படியாகும்? யார் கண்டது?

டீ வந்தது.

''ஏங்கா ரூம்புக்கு இரண்டு நாளா போறதில்ல?''

''ச்சீ போடா அதிகப் பிரசங்கி'' என்று அதட்டினாள். இவனிடம் உண்மைக் காரணத்தை சொல்லலாமா? சொன்னால் அவனுக்கு என்ன புரியும். இவள் அதட்டியதற்கு மன்னிப்பை கோருவது போல் முகத்தை சிரித்தபடி வைத்துக் கொண்டு கிளாசையும், அவனிடம் காசையும் தந்தாள். தானும் முகம் கழுவிக் கொள்ளலாம் என்று எண்ணி கதவைத் தாண்டி வந்தவள், இன்று முகம் கழுவி என்ன பிரயோஜனம் என்று தோன்றியது. எஸ்தர் முழு அலங்காரத்துடன் மாடிப்படி அருகில் நின்று கொண்டிருந்தாள். எவ்வளவு பெரிய கிழவியானாலும் அவள் தாவணிதான் போடுவாள் போல் இருக்கிறது என்றவாறு அறையில் நுழைந்து பாயின் அருகில் வந்து உட்கார்ந்தாள்.

அதற்குள்ளாகவே நன்றாக இருட்டிவிட்டிருந்தது. நாளை காலை இவள் குளித்துவிடுவாள். சுப்பராயலுக்கு நிச்சயம் லேசாக சந்தோஷம் வரும். எஸ்தரைப்போலவே அலங்காரத்தில் கவனம் செலுத்துவாள். பாவாடை தாவணி அணியாமல் புடவை கட்டுவாள். மாடிப்படி ஏறி வருகிறவர்களின் காலடி ஓசை கேட்டு கதவு அருகில் வந்து தன் முகம் காட்டுவாள், வேண்டாம் என்பவர்களைப் அலட்சியமாகப் பார்ப்பாள். முற்றாக ஆடையை விலக்கி தன் உடல் மீது படரும் மனிதர்களின் உடல் பாரத்தோடும் இவளின் மனப்பாரமும் சேர்ந்து கொள்ளும். அப்பொழுது கண்களை மூடித்தான் இருப்பாள். அவள் உணரும் அந்த இருட்டில் அன்று வந்து போனவனின் முகத்தை தேட நினைப்பாள், இந்தக் கடைசி அறை வருவதற்கு இடையில் உள்ள நாட்களில் தினமும் தன்மீது உண்டாகப்போகும் அந்த நிகழ்வுகளை எண்ணும் பொழுதே இவளுக்கு களைப்பும் சோர்வும் உண்டாகியது. எல்லோருக்கும் கடைசி வரையில் அம்மா, அப்பா இருக்க வேண்டும் என்று அவசரமாக அவள் மனதில் உதித்தது. இந்த அறையே அவளுக்குப் பிடிப்பது போல் இருந்தது.

வெளியே இருந்த லைட் கம்பத்தின் வெளிச்சம் ஜன்னலின் வழியே பாய்ந்து உள்ளே கவிந்திருந்த இருட்டைக் கிழித்துக்கொண்டு ஒளி ரேகைகளை சிந்திக் கொண்டிருந்தது. இவள் லைட்டைப் போட மனமில்லாமல் அந்த வெளிச்சத்தையே பார்த்துக்கொண்டு மெதுவாக உடலை தளர்த்தி மீண்டும் சுருண்டு படுத்துக் கொண்டாள். □

## பாலம்

□

□

செப்டம்பர் மாத பாலம் வெளிவரவில்லை என்பது குறித்து நண்பர்கள் மற்றும் வாசகர்களிடமிருந்து 'கவலை தெரிவித்து' மடல்கள் வந்தன. ''எப்படியும் தொடர்ந்து வரவேண்டும்'' என்று எழுதியிருந்தனர். பாலத்தின் தேவையை அனைவரும் புரிந்துள்ளனர் என்பது குறித்து ஆசிரியர் குழுவினருக்கு மகிழ்ச்சியே. இவைமட்டுமே போதுமா? ஆக்கபூர்வமான பங்களிப்பு தேவையில்லையா? இது குறித்து ஈழ நண்பர் கழகத்தினர் கவனத்திலெடுக்க வேண்டும்.

—ஆசிரியர்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# வளைகுடா நெருக்கடி : சில வரலாற்று உண்மைகள்

□

எஸ். வி. ராஜதுரை

□

**ஈராக்**

மெசொபொடோமியா, உலகின் மிகத் தொன்மையான நாகரிகமொன்றின் பிறப்பிடம். டைக்ரிஸ்-யூஃப்ரடிஸ் ஆற்று நீர்ப் பாசனத்தால் வளம்பெற்ற இப்பகுதி பல நூற்றாண்டுக்காலம் பல்வேறு மக்களைத் தன்பால் கவர்ந்திழுத்துக் கொண்டிருந்தது; ஏழாம் நூற்றாண்டில் இங்கு பாக்தாத் நகரை நிறுவிய அராபியர்கள் இஸ்லாம் சமயத்தையும் கொண்டு வந்தனர். இன்றைய ஈராக்கை இருபகுதிகளாகப் பிரித்து விடலாம். பழைய மெசோபொடோமியாப் பகுதி ஒன்று ; எண்ணெய் வயல்கள் நிறைந்த வட பகுதி மற்றொன்று. 17ஆம் நூற்றாண்டில் ஈராக் துருக்கியின் ஓட்டோமான் பேரரசால் ஆக்கிரமிக்கப்பட்டது. முதலாம் உலகப்போரில் துருக்கி தோல்வியடைந்த பின் ஈராக், பிரிட்டிஷாரால் கைப்பற்றப்பட்டது. 1927இல் ஈராக்கின் கிர்குக் பிரதேசத்தில் எண்ணெய் கண்டுபிடிக்கப்பட்டதும் அப்பிரதேசத்தில் உரிமை கொண்டாடியவர்கள் துருக்கியர், பிரிட்டிஷார், ஜெர்மானியர். இறுதியில் எண்ணெய்த் தொழில் பிரிட்டிஷ், அமெரிக்க நிறுவனங்கள் வசமாயிற்று. பின்னர் 193? இல் பிரிட்டிஷாரின் ஒப்புதலுடன் ஈராக் மன்னர் (எமிர்) ஃபெய் சல் ஈராக்கின் சுதந்திரத்தைப் பிரகடனம் செய்தார். 1958இல் அவரது மகன் இரண்டாம் ஃபெய் சல் தூக்கியெறியப்பட்டு, ஈராக் ஒரு குடியரசாக மலர்ந்தது. ஆனால் நாட்டின் ஒற்றுமை என்பது 1968இல் நடந்த புரட்சி, அராபிய மற்றும் சோசலிசபாத் கட்சியை (Arab and socialist Baath Party) ஆட்சிக்குக் கொண்டுவந்த பிறகே உறுதிபெற்றது எனலாம் ('பாத்' என்ற அரபுச் சொல்லின் பொருள் 'புத்தெழுச்சி') அரபுநாடுகள் முழுவதுமே "ஒரு பிரிக்க முடியாத அரசியல் பொருளாதார அலகு" என்று பாத்கட்சி அறிவித்தது. அதே சமயம் "சோசலிசம் என்பது அரபு தேசியத்திலிருந்து மீறிட்டு வருகிற ஒரு தவிர்க்க முடியாத அம்சம்" என்றும் "அரபு மக்கள் தமது உள்ளுறையாற்றலை வளர்ப்பதற்கும் தமது மேதைமையை வெளிப்படுத்துவதற்குமான ஒரு இலட்சியஆட்சியமைப்பே சோசலிசம்" என்றும் அது கூறியது.

பன்னாட்டுக் குழுமங்கள் வசமிருந்த எண்ணெய் வயல்களையும் சுத்திகரிப்புத் தொழிற்சாலைகளையும் ஈராக் தேசவுடைமையாக்கியது. அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கும் இஸ்ரேலின் யூத இன வெறி வாதத்துக்கும் (zionism) எதிரான போராட்டத்தில் நில எண்ணெயை ஒரு அரசியல் ஆயுதமாகப் பயன்படுத்திற்று. ஒபெக் (Opec) நாடுகளின் உரிமையை வலுப்படுத்துவதிலும் அந்நாடுகள் உற்பத்தி செய்யும் எண்ணெய் விலையை நிர்ணயிப்பதிலும் ஈராக் முக்கிய பங்காற்றியது. ஈராக்கின் தேசிய முன்னணியில் அங்குள்ள பொதுவுடைமைக் கட்சியையும் இணைத்துக் கொண்ட பாத்கட்சி, நிலச்சீர்த்திருத்தங்களை நிறைவேற்றி நிலக்கிழார்களின் ஆட்சிக்கு முடிவு கட்டியது. எண்ணெயிலிருந்து கிட்டிய வருவாயை பெரும் தொழிற் திட்டங்களில் முதலீடு செய்தது. அராபிய வளைகுடாவில் ஈரானின் ஷா மன்னனின் விரிவாக்க முயற்சிகளைத் தடுத்து நிறுத்தியது. இன்று ஈராக் உட்பட ஐந்து நாடுகளில் பிரிந்து கிடக்கும் குர்து தேசிய இன மக்களுக்கு—தமது தேசியத் தன்னுரிமைக்காக பன்னூறாண்டுகளாய் போராடும் குர்து இன மக்களுக்கு—ஓரளவு தன்னாட்சி உரிமையை வழங்கியது. 1970இல் குர்து மொழியை ஆட்சி மொழியாகவும் ஆக்கியது. ஆனால் பகைநாடுகளின் பகடைக் காய்களாகத் தொடர்ந்து பயன்படுத்தப்பட்டு வரும் குர்து மக்களின் தலைவர்களில் ஒரு பகுதியினர் ஷா மன்னனின் ஆசை வார்த்தைகளுக்கு இரையாகி ஈராக் அரசாங்கத்துடன் போர் தொடுத்தபோது அப் போர் 1975இல் முறியடிக்கப்பட்டது. ஈராக் ஈரான் ஆகிய இரு நாடுகளுமே குர்து மக்களை ஒடுக்கி வருகின்றன. ஈராக்கின் இன்றைய அதிபர் சதாம் உசேனின் இராணுவம் இரண்டாண்டுகளுக்கு முன்பு பல்லாயிரக் கணக்கான குர்துகளை இரசாயன நச்சுப்புகை கொண்டு கொன்றது. இது உலகெங்கிலுமிருந்தும் ஈராக்கின்மீது கண்டனங்களைத் தொடுக்க வைத்த நிகழ்ச்சியாகும். 1974இல் அதிபர்அல் பக்கர் பதவி விலகியதையடுத்து துணை அதிபராக இருந்த சதாம்உசேன் பதவிக்கு வந்தார். அவருக்கு எதிராகமைந்த இராணுவப்புரட்சியை ஒடுக்கித் தனது அதிகாரத்தை நிலைநிறுத்தினார். 1980இல் துவங்கி ஏறத்தாழப் பத்தாண்டுகள் நடந்த ஈராக்-ஈரான் போர் இரு நாடுகளுக்கும் மிகப் பெரும் மனித, பொருளாதார அழிவுகளை ஏற்படுத்தியது. இதனால் பயனடைந்தவர்கள் ஆயுத வாணிபத்தில் வல்லவர்களான அமெரிக்க, ஐரோப்பிய நாடுகள்தாம்.

www.tamilarangam.net



அமெரிக்க, மேற்கு ஐரோப்பிய ஏகாதிபத்திய நாடுகளுக்கு எதிரான நிலைப்பாடு மேற்கொண்ட ஈராக், எகிப்து, இஸ்ரேல், அமெரிக்கா ஆகிய மூன்றும் அமெரிக்காவிலுள்ள டேவிட் முகாமில் செய்துகொண்ட ஒப்பந்தங்களுக்காக எகிப்தைக் கண்டனம் செய்யும் அரபு நாடுகளுக்குத் தலைமை தாங்கியது. 1980இல் ஈராக் நாட்டின் முதல் தேசிய அவை (National Assembly) தேர்ந்தெடுக்கப்பட்டது. 1981 ஜூன் 7ஆம் நாள் ஈராக்கில் தாமுஸ் (Tamus) என்ற இடத்திலிருந்து அணுமின் நிலையத்தை (ஃபிரான்சின் உதவியுடன் கட்டப்பட்டது) இஸ்ரேல் விமானத் தாக்குதல் மூலம் தகர்த்தெறிந்தது. அந்த நிலையத்தின் அணு ஆயு தங்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன என்று இஸ்ரேல் குற்றம் சாட்டியது. சர்வதேச விதிகளை மீறி செயல்பட்ட இந்த அப்பட்டமான ஆக்கிரமிப்புக் செயலை 'ஜனநாயக' அமெரிக்காவோ இங்கிலாந்தோ கண்டிக்கவில்லை, பாத் கட்சியின் தலைமைச் செயலாளராகப் பணியாற்றும் சதாம் உசேன் ஈராக்கில் ஜனநாயக வாழ்வை ஊக்குவிப்பவர் என்று யாரும் கூற முடியாது.

## குவைத்

சென்ற ஆகஸ்ட் முதல்வாரத்தில் ஈராக்கால் இணைத்துக் கொள்ளப்பட்ட சின்னஞ்சிறு வளைகுடா நாடான குவைத்தின் வரலாற்றைக் காண்போம். அந்த நாட்டின் குவைத் பழங்குடியினர் 17 ஆம் நூற்றாண்டில் இன்றைய ஈராக் துருக்கியின் ஓட்டோமான் பேரரசின் ஆதிக்கத்துக்கு உட்படுத்தப்பட்டவரைபாக்தாத் காலிஃபின் ஆளுகையின் கீழிருந்தன. ஓட்டோமான் பேரரசின் கீழ் இப்பிரதேசம் கொரீன் (koreen) என்றழைக்கப்பட்டது. 18ஆம் நூற்றாண்டின் துவக்கத்தில்தான் இதற்கு குவைத் என்ற பெயர் சூட்டப்பட்டது. 19ஆம் நூற்றாண்டின் இறுதியில் இப்பகுதியைச் சேர்ந்த எமிர் மபாரக் அல்-சாபா, துருக்கிப் பேரரசின் ஒரு பகுதியாக குவைத் இணைத்துக் கொள்ளப்படாமலிருப்பதற்காக இங்கிலாந்து வழங்கிய ''பாதுகாப்பை,' ஏற்றுக்கொண்டதன் காரணமாக, குவைத் பிரிட்டிஷ் முடியாட்சியின் ஆளுமைக்குட்பட்டது. 1938இல் குவைத்தின் பர்கான் எண்ணெய் வயல்கள் கண்டுபிடிக்கப்பட்டன. அமெரிக்க-பிரிட்டிஷ் மூலதனத்துக்குச் சொந்தமான குவைத் எண்ணெய் கம்பெனி நிறுவப்பட்டது. சூயஸ்கால்வாய் நெருக்கடியை அடுத்து 1961இல்குவைத் சுதந்திரம் பெற்றது. முன்பு ஈராக்கின் பகுதியாக இருந்த குவைத் இவ்வாறு தனிச்சுதந்திர நாடாகப் பிரகடனப் படுத்தப்படுவதை ஈராக் எதிர்த்தது. ஆனால் ஈராக்கிற்கு அரபு லீகின் (Arab League)ஆதரவு கிட்டவில்லை. பிரிட்டிஷ் துருப்புகளுக்குப் பதிலாக அரபுலீக் நாடுகளின் துருப்புகள் குவைத்துக்கு வந்து சேர்ந்தன. பின்னர் இரு நாடுகளுக்குமிடையே இருந்த தகராறுகள் தீர்க்கப்பட்டு, இரண்டுக்குமிடையே நடுநிலை வலயங்கள் (neutral runs) உருவாக்கப்பட்டன. 1963இல் குவைத் ஐ.நா.சபை உறுப்பினராயிற்று.

1962இல் பாராளுமன்ற முடியாட்சிமுறை (இங்கிலாந்து போல) உருவாக்கப்பட்ட இந்த நாட்டில் அல்சாபா குடும்பத்தினரே தொடர்ந்து ஆட்சியில் உள்ளனர். 1974இல் குவைத் எண்ணெய்க் கம்பெனியின் சொத்துக்களில் 60% நாட்டுடைமயாக்கப்பட்டது. பின்னர் 1975 இல் குவைத் அரசு அக் கம்பெனி முழுவதையும் தனது உடைமையாக்கியது. தனது நாட்டின் எண்ணெய் வளத்தை எச்சரிக்கையுடன் பயன்படுத்தி வந்த குவைத், எண்ணெய் விலையின் ஏற்ற இரக்கங்கள் மூன்றாம் உலகநாடுகள் மீது ஏற்படுத்தும் பாதிப்பைப் பற்றி நன்கு உணர்ந்திருந்தது. ஓபெக் நாடுகளில் ஒன்றான குவைத் பல்வேறு மூன்றாம் உலக நாடுகளுக்கு உதவி வழங்கி வந்தது. கல்வியையும் மருத்துவத்தையும் நாட்டுமக்கள் அனைவருக்கும் இலவசமாக வழங்கி வந்தது.

குவைத்தில் தொழிலாளர் பற்றாக்குறை இருந்ததன் காரணமாக மிகப்பெரும் எண்ணிக்கையில் வெளிநாட்டுத் தொழிலாளர்களை வரவழைத்தது. அந்நாட்டின் மக்கள் தொகையில் 60 சதவீதத்துக்கும் அதிகமானவர்கள் வெளிநாட்டவரே (பாலஸ்தீனியர்கள், எகிப்தியர்கள், இரானியர்கள், பாகிஸ்தானியர்கள், பங்காளதேசிகள், ஃபிலிப்பைன்ஸ் நாட்டினர், அமெரிக்கர்கள்). ஆனால் குவைதி இனத்தவருக்கு மட்டுமே வாக்குரிமை உண்டு. வெளிநாட்டவருக்கும் பெண்களுக்கும் அவ்உரிமை இல்லை. ஆனால் அங்கு புலம் பெயர்ந்து சென்றோரில் பாலஸ்தீனியர்கள் குவைத்தின் அறிவாளிகள் மீதும் அந்நாட்டின் வெளியுறவுக் கொள்கை மீதும் கணிசமான செல்வாக்குச் செலுத்தி வந்துள்ளனர்.

வெளியுறவுக் கொள்கையைப் பொறுத்தவரை குவைத் டேவிட் முகாம் ஒப்பந்தத்தைக் கடுமையாக எதிர்த்துள்ளது. பாலஸ்தீனியர்களின் உரிமையை ஆதரித்துள்ளது. ஈரான்-ஈராக் போரில் 'அதிகாரபூர்வமாக' நடுநிலையை வகித்த போதிலும் உணவுப் பொருட்களையும் சுத்திகரிக்கப்பட்ட எண்ணெயையும் ஈராக்கிற்கு வழங்கி வந்தது. இப்போரினால் ஈராக்கிற்கு ஏற்பட்ட சுமார் 80 பில்லியன் டாலர் வெளிநாட்டுக் கடனில் சுமார் 50% குவைத்துக்கும் சவுதி அரேபியாவிலும் வழங்கப்பட்டது. ஐக்கிய அரபு எமிரேட்டுகள் (UAE) ஈராக்கின் போர் நடவடிக்கைகளுக்கு உதவிசெய்தது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



1981 இல் அமெரிக்காவும் பின்னர் இங்கிலாந்தும் வளைகுடாப்பகுதியில் வரைந்து செயல்படும் ஒரு நிரந்தரமான இராணுவப் படையை வைக்க வேண்டும் என்று கூறிய யோசனையையும் வளைகுடாப் பகுதியைப் பாதுகாக்க அமெரிக்க ராணுவ உதவியை நாடிய ஓமன் நாட்டின் முயற்சியையும் குவைத் திட்டவட்டமாக நிராகரித்தது. சோவியத் யூனியனுடன் இராசதந்திர உறவுகளை நிறுவுமாறு வளைகுடா கூட்டுறவுக் குழுவைச் (GCC) சேர்ந்த ஆறு நாடுகளுக்கு குவைத் வேண்டுகோள் விடுத்தது. வடக்கு ஏமனுடன் பேச்சுவார்த்தை நடத்துமாறு சவூதி அரேபியாவை ஊக்குவித்தது.

உலகின் செல்வ நாடுகள் பட்டியலில் 17 ஆவது இடம் வகிக்கும் குவைத் நாட்டில் முக்கிய பொருளாதாரப் பிரச்சனைகள் சில தீர்க்கப்படவில்லை. அங்கு ரயில்பாதைகளோ, உள்நாட்டு விமான சேவைகளோ இல்லை. எண்ணெயிலிருந்து கிடைக்கும் வருவாயில் பெரும்பகுதி (2/3 பகுதி) அமெரிக்காவிலும் மேற்கு ஐரோப்பிய நாடுகளிலும் முதலீடு செய்யப்பட்டுள்ளது. சுமார் 30./' மட்டுமே குவைத்தில் முதலீடு செய்யப்பட்டுள்ளது. 1980 இல் குவைத் அரசாங்கம் 360 மில்லியன் டாலர் முதலீடு செலுத்தி குவைத் சர்வதேச பெட்ரோலியம் முதலிட்டு கம்பெனியை (KIPIC) துவக்கிற்று, இதில் ஜெர்மன் கம்பெனியொன்றுக்கு 20% பங்குகளும், பிரிட்டிஷ் எரிபொருள் கம்பெனியொன்றுக்கு 25% சதவீதமும் உள்ளன. கட்டிட, சாலை நிர்மானங்கள் மேற்கொள்ளும் சிங்கப்பூர், பாகிஸ்தான், மலேசியக் கம்பெனிகள் சிலவற்றுக்கும் இதில் இடமுண்டு.

**ஈராக்கின் படையெடுப்பு காரணங்கள் :**

இத்தகையதொரு பின்னணியில் குவைத் மீது ஈராக் திடீரெனப் படையெடுத்து அதைத் தனது நாட்டின் பகுதியாக இணைத்துக் கொண்டுள்ளது. உடனடிக் குழப்பத்திலும் வியப்பிலும் ஆழ்த்தியுள்ளது. முடியாட்சிக்கு எதிராகத் திரண்டுள்ள மக்களாதரவு சக்திகளின் அழைப்பின் பேரிலேயே தனது படைகளை குவைத் திற்கு அனுப்பியதாக ஈராக் கூறுவதை யாரும் எளிதில் ஏற்றுக் கொள்ள முடியாது. ஏனெனில் அத்தகைய சக்திகள் முளைவிடும் பருவத்தில் தான் இருந்தன. மேலும் ஈராக் படையெடுப்பு அச் சக்திகளை முளையிலேயே கிள்ளி எறிந்துவிட்டது என்றும் இதுபிற்போக்கு அரபு நாடுகளின் நிலைப்பாட்டை வலுப்படுத்தியுள்ளது என்றும் பார்வையாளர்கள் கருதுகின்றனர். அதேபோல குவைத்தின் வெளியுறவு அமைச்சர் ஒரு அமெரிக்காவின் ஏஜன்ட், கடந்த பத்தாண்டுகளாகவே ஈராக்கு சேர வேண்டிய எண்ணெயை குவைத் அபகரித்து வந்தது. ஈராக்குக்கு எதிரான ராணுவ நடவடிக்கைகளை பயன் படுத்தி வந்தது என்ற குற்றச்சாட்டுகளுக்கும் ஆதாரமில்லை. அவர்களில் மிகப்பெரும்பாலோர் ஒப்புக் கொள்ளும் காரணம் கீழ் வருமாறு:

ஈராக்கின் வெளிநாட்டுக்கடன்கள் 70 மில்லியன் டாலரை எட்டிவிட்டன். இதில் அரபு நாடுகள் தவிர பிற நாடுகளிலிருந்து வாங்கிய கடன் 30 மில்லியன் டாலர் ஆகும். எனவே போரால் சிதைந்து போன தனது பொருளாதாரத்தைப் புதுப்பிக்க ஈராக் தனது எண்ணெயையே சார்ந்திருக்கிறது. ஓபக் (Opec Organisation of petroliem Exporting Nations) தனது உறுப்பு நாடுகள் ஒவ்வொன்றும் உற்பத்தி செய்யக் கூடிய எண்ணெயின் அளவுக்கு உச்சவரம்பு வகுத்துள்ளது. இந்த வரம்புக்கு அதிகமாக உற்பத்தி செய்வதன் காரணமாக எண்ணெய் விலை சரிகிறது என்றும் எனவே ஒவ்வொரு நாடும் தனது உற்பத்தியை மட்டுப்படுத்த வேண்டும் என்றும் ஈராக் கூறுகிறது. 1989 இல் நடந்த ஓபெக் நாடுகளின் பேச்சு வார்த்தைக்குப் பிறகு ஈராக்கின் விருப்பப்படி நடந்து கொண்ட சவூதி அரேபியா, ஈராக்குடன் ஒரு சமாதான ஒப்பந்தத்தையும் (non-aggression pact) ஏற்படுத்திக் கொண்டது. நாளொன்றுக்கு 19.5 மில்லியன் பீப்பாய் எண்ணெய் மட்டுமே உற்பத்தி செய்ய ஒப்புக் கொண்டது. குவைத்தும் ஐ.அ. எமிரெட்டுகளும் ஓபக் உச்சவரம்பை மீறி வந்தன. ஈராக் உற்பத்தியில் 40%த்தைக் குறைத்து அதன் மூலம் பீப்பாயொன்றுக்கு 25 டாலர் என விலையை உயர்த்த விரும்பியது. ஓபக் நாடுகளுக்கிடையில் நடந்த விவாதங்களின் போது எண்ணெய் விலையை 14 டாலரிலிருந்து 20 டாலருக்கு உயர்த்துவதில் ஈராக் வெற்றி பெற்றது. பீப்பாய் ஒன்றுக்கு விலை ஒரு டாலர் குறைந்தாலும் தனக்கு ஆண்டு தோறும் ஒரு பில்லியன் டாலர் இழப்பு ஏற்படுகிறது என்று ஈராக் கூறிவந்தது, எனவே தனக்கு மிகவும் பொருளாதார இழப்புகளை ஏற்படுத்திவந்த குவைத் (மற்றும் ஐ.அ.எ.) மீது ஈராக் எரிச்சல் கொண்டிருந்தது. குவைத்தை தன்னுடன் இணைத்துக் கொள்வதன் மூலம் அரபு நாடுகளிலேயே சவுதி அரேபியாவுக்கு அடுத்தபடியாக மிகப்பெரும் எண்ணெய் உற்பத்தி நாடாக மாறி, தனது பொருளாதார வலுவைப் பெருக்கிக் கொள்ளலாம் என்பதுதான் ஈராக்கின் நோக்கம். சவுதி அரேபியாவைத் தாக்கி அதை ஆக்கிரமித்துக் கொள்வதற்காகத்தான் குவைத் மீது முதலில் ஈராக் படையெடுத்தது என்று அமெரிக்கா முன் வைக்கும் குற்றச்சாட்டுக்கு ஆதாரமில்லை.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஏனெனில் அப்படிப் படையெடுக்க ஈராக் விருப்பினால் குவைத் மூலம் சுற்றி வளைத்துச் செல்ல வேண்டியதில்லை. ஈராக்குக்கும் சவுதி அரேபியாவுக்கும் பொதுவான எல்லைகள் உள்ளன. மேலும் இத்தகைய படையெடுப்புக் கான சாத்தியப்பாட்டை எண்ணியே, சவுதி அரேபியா 1989இல் ஈராக்குடன் ஒப்பந்தம் செய்து கொண்டதுமட்டுமின்றி, கலீட் அரசர் பெயரில் ஒரு பெரும் வலுவான இராணுவ நகரத்தைக் கட்டியெழுப்பியுமுள்ளது.

### படையெடுப்பின் பின் விளைவுகள்

ஈராக்கின் படையெடுப்பு அரபு உலகில் எதிரும் புதிருமான பின்விளைவுகளை ஏற் படுத்தியுள்ளது. அரபு லீக் நாடுகளில் பிளவு ஏற்பட்டுள்ளது. அது நடத்திய அவசரக் கூட்டம் படையெடுப்பைக் கண்டனம் செய்யும் கடுமையான தீர்மானம் நிறை வேறவில்லை. படைகளைத் திரும்பப் பெறுமாறு மென்மை யான வேண்டுகோள் விடுத்தது. ஜோர்தான், லிபியா, மாரிடானியா, பாலஸ்தின், சூடான், ஏமென், ஈராக் ஆகியன கூட்டத்தில் கலந்து கொள்ளவில்லை. அமெரிக்க ஏகாதிபத்தி யத்தின் கூட்டாளிகளான சவுதி அரேபியாவுக் கும் இஸ்ரேலுக்கும் எதிராகவும் மேலை சார்பு டைய பிற அரபு நாட்டரசாங்கங்களுக்கும் எதிராகவும் அரபு மக்களின் தேசிய உணர்வு தட்டியெழுப்பட்டுள்ளது. இந்த உணர்வைப் போராட்டமாக மாற்றி ஈராக் தலைமை வகிக்க விரும்புகிறது.

எண்ணெய் வளத்தைப் பயன்படுத்து வதைப் பொறுத்தவரை (ஓபக் பிரித்த உச்ச வரம்பை சவுதி அரேபியா பின்பற்றிய போதி லும்) ஈராக்கின் பார்வையிலிருந்து சவுதி அரேபியாவின் பார்வை கூர்மையாக வேறுபடு கிறது. ஒரு நீண்டகாலம் எண்ணெய் விலையை உயர்த்தி வைத்திருந்தால் தொழில் வளர்ச்சி யடைந்த நாடுகள், மாற்று எரிபொருள் சக்தியைக் கண்டறியத் தொடங்குவர் என்று அது கருதுகிறது. விலையைப் பீப்பாய் ஒன்றுக்கு 18 டாலர் எனக் குறைத்து உற்பத்தி அளவை அதிகரிக்க விரும்புகிறது சவுதி அரோபியா மேற்கு நாடுகளுக்கு உகந்த இந்தப் பார்வை, அதிக விலையின் மூலம் விரைவாக லாபமீட்ட விரும்பும் ஈராக்கிற்கு உவப்பாக இல்லை.

ஈராக்கின் படையெடுப்பால் வளர்ச்சி யடைந்த நாடுகள் கீழ்க்காணும் வகையில் நன்மையடைந்துள்ளன என ஜஜெட் நக்வி கருதுகிறார்:

(1) ஓபெக் செயலிழந்து போகும் சாத்தி யப்பாடு. இதன் காரணமாக சவுதி அரேபியா போன்ற நாடுகள் உச்சவரம்பை மீறி உற்பத்தி செய்யும் விலையைக் குறைக்கவும் செய்யும்.

(2) இஸ்ரேல் மீதான அரபு நாடுகளின் கவனம் குறையும். பாலஸ்தினியர்களுக்கான ஆதரவு குன்றும்.

(3) ஈராக்கின் ஏகாதிபத்திய எதிர்ப்பும் சென்ட்டோ (CENTO) என்ற இராணுவ உடன் படிக்கை எதிர்ப்பும் மேற்கு நாடுகளுக்கு எரிச்சல் தந்த விஷயங்கள். அதேசமயம் வேறொரு காரணத்துக்காக அண்மையில் குவைத் எதிர்ப்பு மனப்பான்மையும் அந்நாடுகளில் உணரத் தொடங்கியது. வெளிநாடுகளில் குவைத்தின் முதலீடு 100 பில்லியன் டாலரைத் தாண்டி விட்டது. இதில் மிகப்பெரும் பகுதி வளர்ச்சி யடைந்த நாடுகளில்தான். இந்த முதலீட்டி லிருந்து குவைத்துக்குக் கிடைத்துவந்த வருடாந்திர வருமானம் 6 பில்லியன் டாலர். அதன் எண்ணெய் ஏற்றுமதியிலிருந்து கிடைக் கும் வருவாய்க்கு சமமான தொகை. அண்மை யில் ஸ்பெயின் நாட்டிலுள்ள கம்பெனிகளில் குவைத் செய்த முதலீடு ஸ்பெயின் தேசிய வாதத்தைத் தட்டியெழுப்பக் காரணமாக இருந்தது. அதே போல பிரிட்டிஷ் பெட்ரே லியம் கம்பெனியின் பங்குகளில் 21.6 சதவீதத்தை மூன்று பில்லியன் டாலர்களுக்கு குவைத் வாங்கியது. அப்பங்குகளை 9.9% ஆகக் குறைக்குமாறு பின்னர் குவைத் நிர்பந்திக்கப்பட்டது. எனவே இந்த நாடுகளில் இருந்த குவைத்தின் உடைமைகளை, படை யெடுப்பைக் காரணம் காட்டி, பிடித்து வைத் துள்ளன (Froze) மேற்கு நாடுகள்.

(4) அமெரிக்க, பிரிட்டிஷ் ஆயுதம் மற்றும் போர்த் தளவாடங்கள் உற்பத்தி செய்யும் கம்பெனிகள் நன்மையடைந்துள்ளன.

### பொருளாதாரத் தடை

ஐ.நா. பாதுகாப்பு சபை ஈராக்கின் மீது பொருளாதாரத் தடைவிதித்துத் தீர்மானம் நிறைவேற்றியுள்ளமை தமக்குக் கிடைத்த பெரும் வெற்றி என அமெரிக்க ஏகாதிபத்தி யத்தியமும் வளர்ச்சியடைந்த நாடுகளும் குதூ கலிக்கின்றன இத்தீர்மானத்தை ரஷ்யாவும் சீனாவும் கூட ஆதரித்துள்ளன. 23 ஆண்டு களுக்கு முன்பு இத்தகைய பொருளாதாரத் தடை தென்னாப்பிரிக்கா மீது விதிக்கப்பட்ட போது அது நடைமுறைப்படுத்தப்படுகிறதா என்பதை உத்திரவாதம் செய்ய அமெரிக் காவோ அல்லது வேறு வளர்ச்சியடைந்த நாடோ தனது கப்பற்படையையோ விமானப் படையையோ அனுப்பவில்லை. குவைத் என்ற சின்னஞ் சிறு நாட்டின் இறையான்மை பற்றிப் பேசும் தாட்சர் போன்றவர்கள் கிரனடா, பனாமா போன்ற நாடுகளில் அமெரிக்கா நடத்திய அடாவடித்தனம் பற்றிப் பேசியதில்லை. சவுதி அரேபியா வழியாக செங்கடலுக்கும், துருக்கி வழியாக மத்திய

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தரைக்கடலுக்கும் குவைத் வழியாக வளைகுடா விற்கும் ஈராக்கின் எண்ணெய் எடுத்துச் செல்லப்படுவதைத் தடுக்க அமெரிக்கா, பிரிட்டன் முதலிய நாடுகள் முயற்சி செய் கின்றன. ஐ.நா. பாதுகாப்பு சபை தீர்மானம் நிறைவேறுவதற்கு முன்பே அவசரம் அவசர மாகத் தன் கப்பற்/விமானப்படைகளை அனுப் பியது அமெரிக்கா.

ஈராக்கின் படையெடுப்பைக் கண்டிப் பதிலும் ஐ.நா. பாதுகாப்பு சபை தீர்மானத்தை ஆதரிப்பதிலும் சோவியத் யூனியனுக்கும் அமெரிக்காவுக்குமிடையே முழு ஒற்றுமை இருப்பது போலத் தோன்றினாலும் குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் உள்ளன என்று சில பார்வையாளர்கள் கூறுகின்றனர். பொரு ளாதாரத்தடை நடைமுறைப்படுத்தப்படுகிறதா என்பதை உறுதிசெய்ய அமெரிக்காவும் மேற்கு நாடுகளும் தம் படைகளைப் பயன்படுத்துவது குறித்த தீர்மானத்தை சோவியத்யூனியன் தயக்கத்துடனேயே ஆதரித்துள்ளது. சர்வதேச சட்டங்களுக்கு உட்பட்டே நாடுகளுக்கிடையி லான தகராறுகள் தீர்க்கப்படவேண்டும் என்ற கோர்பசேவின் நிலைப்பாட்டுக்குப் பொருத்த மான வகையிலேயே அதன் ஈராக் கொள்கை அமைந்துள்ளது என்று சோவியத் ஆதரவாளர் கள் கூறுகின்றனர்.

''மனிதாபிமான அடிப்படையில் உணவுப் பொருட்களை அனுப்புவது அனுமதிக்கத் தக்கது'' என்ற ஐ.நா.சபைத் தீர்மானத்தின் பகுதியை சீனா, இந்தியா, ஈரான் போன்ற நாடுகள் வற்புறுத்துகின்றன. அமெரிக்கா ஈராக்கை எதிர்க்கும் அமெரிக்க சார்புநாடு களிடையேகூட விரிசல் ஏற்படத் தொடங்கி யுள்ளது. ''ஈராக்கியர்கள் நிர்மூலமாக்கப் படுவதை யாரும் விரும்ப முடியாது'' என்று எகிப்தின் அதிபர் மொபாரக் கூறவேண்டி யுள்ளது. ஈரானும் ஈராக்கும் தம் நெடுங்காலப் பகையைப் புதைத்துவிட்டு ஒன்று சேர்ந்து விட்டன. இது உலகிலுள்ள பிற முஸ்லிம் நாடுகள் மீது பெரும் தாக்கம் ஏற்படுத்தக்கூடும்

ஃபின்லாந்துத் தலைநகரம் ஹெல்சிங்கியில் 9-9-80 அன்று கோர்பசேவுக்கும் புஷ்ஷுக்கும் இடையில் நடந்த உச்ச கட்டக் கூட்டத்தில் இருநாடுகளும் ஐ.நா. சபையின் தீர்மானத்தை ஆதரித்து, சமதான வழியில் பிரச்சனை தீர்க்கப் படவேண்டும் என்று வற்புறுத்தியுள்ளனர். சித்தாந்த அரசியல், பொருளாதாரமுனைகளில் பலகீனப்பட்டுள்ள சோவியத்யூனியனால் இஸ்ரேல் ஆக்கிரமிப்பு பற்றியோ சவுதி அரேபியாவின் பாதுகாப்பு என்ற பெயரால் தேவைக்கும் அதிகமாக பலமடங்குப் படை களையும் விமானங்களையும் ஆயுதங்களையும் குவித்துள்ள அமெரிக்காவின் ஆக்கிரமிப்பு நோக்கம் பற்றியோ எதையும் கூறமுடிய வில்லை. மத்திய கிழக்கு முழுவதிலும் தன் மேலாதிக்கம் நிரந்தரமாக இருக்க வேண்டும் என்பதுதான் அமெரிக்காவின் நோக்கம்.

ஈராக்கோ, தனது நிலைப்பாட்டில்மாற்றம் இல்லை என்று அறிவித்துவிட்டது. தனது நெடு நாள் பகைவனான ஈரானுடன் நட்பை வளர்த்து வருகிறது. ஏகாதிபத்திய எதிர்ப்பு, அரபு தேசியவாதம், இஸ்லாமிய உணர்வு ஆகியவற்றைத் தனது ஆயுதங்களாகப் பயன் படுத்துகிறது. ஒரு போர் மூளுமானால், அது அரபு உலகம் முழுவதற்குமே பெரும் நாசத்தை ஏற்படுத்தும். ஆனால், ஈராக்கின் பார்வையில் இன்று இந்த அபாயகரமான பந்தயத்தில் ஈடு படுத்தப்பட்டிருப்பது அரபு உலகம் முழுவதன் தன்மானமாகும்.

வளைகுடா நெருக்கடியால் எரிபொருள் எண்ணெய் விலை உயர்வதாலோ அல்லது பற்றாக்குறை ஏற்படுவதாலோ அமெரிக்கா, பிரிட்டன். ஜப்பான் போன்ற நாடுகள் பாதிக் கப்படப் போவதில்லை. தமக்கு சார்பான நாடு களிலிருந்து மேலும் கூடுதலான எண்ணெயை அவை பெற்றுக்கொள்ளும். அமெரிக்கா போன்ற நாடுகள் வெனிசுலா போன்ற தென் அமெரிக்க நாடுகளில் உள்ள தமதுகம்பெனிகள் மூலம் எண்ணெய் உற்பத்தியை அதிகரிக்கும்.

இதற்கிடையில் பாலஸ்தீன விடுதலை அமைப்பு (PLO) போன்ற அரபு நாடுகள் சில, அரபு நாடுகளாகவே இப் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும் என்று கூறுகின்றன. தான் ஆக்கிரமித்த இடங்களைவிட்டு இஸ்ரேல் வெளியேறினால் ஈராக்கும் குவைத்தைவிட்டு வெளியேறத் தயார் என்று சதாமும் அராஃபட்டும் கூறுவது யதார்த்தத்துக்கு ஒவ்வாதவை யாக இருக்கலாம். ஆனால் அதிலுள்ள நியாயத்தை யாரால் மறுக்க முடியும்-ஏகாதி பத்தியத்தையும் ஸ்யோனிசத்தையும் தவிர.

**இக் கட்டுரைக்கான ஆதாரங்கள் :**

1. Third World Guide, Edited by Roberto Remo Bissio, 198÷

2. New Arab Genderme, Editorial in Economic and Political Weekly, Bombay, August 4, 1990.

3. The hidden beneficiaries emerge by Jawed Naqvi, The Economic Times, Bangalore, August 10, 1990.

4. How West can turn off the oil taps by Steven Butler, The Economic Times Bangalore, August 10, 1990.

5. Soviet approach to Gulf-many political gains, by C. Raja Mohan, The Hindu, September 6, 1990.

வெளியிடுபவர்: இரா. திரவியம், 25 அருணாசலபுரம் மெயின்ரோடு, அடையாறு, சென்னை-20
அச்சிட்டோர் : ஜெ. ரமணி, பிளேஸ் பிரிண்டர்ஸ், சென்னை-20

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இந்திய சென்சஸ்-1991

1

தாழ்ப்பாளிட்ட கதவுமுன்
அழைப்பு மணியை அழுத்துமுன்னே
எகிறிக் குதிக்கும் நாய்க்குரைப்பு;
அதிரப் பின்தொடரும்
யாரது என்ற அதட்டல்

நான்—
யாசகனல்ல;
ஆயுதம் காட்டி
உம் பொருளை அபகரித்துப் போகவரும்
கொள்ளைக்காரனுமல்ல;
நான் ஒரு கணக்கெடுப்பாளன்.
அரசாங்க ஊழியன்.
தயவுசெய்து கதவைத் திறவுங்கள்.

கணக்கெடுத்து என்ன செய்யப்போகிறீர்கள்?

எவ்வளவு மக்கள்
எப்படி வாழ்கிறார்கள்
என்று தெரிந்துகொள்வோம்.

தெரிந்து என்ன செய்யப்போகிறீர்கள்
என்றுதான் கேட்கிறேன்.

நான் வெறும் கணக்கெடுப்பாளன் மட்டுமே
என்றபடி கவனமாய்
அவர் கேட்டை நான் தாழிட்டுச் சென்றேன்
கணக்கை முடித்துச் செல்லும்போது.

2.

அம்மா
நான் உங்கள் நலங்களையெல்லாம்
விசாரிக்க வந்தவனல்ல;
அரசாங்கப் படிவங்களை
பூர்த்திசெய்ய மட்டுமே பணிக்கப்பட்ட
ஒரு எண்; கணக்கெடுப்பாளர் என்பது பெயர்.

உங்களிடம் காணும் அறியாமையும்
நம்பிக்கையும் நப்பாசையுமல்லவா
என்னை ஒரு ரட்சகனைப்போல்
உங்கள் முன் நிறுத்துகிறது?

உங்கள் சிறுசிறு தேவைகளை நிறைவேற்ற
நான் இந்த வார்டு கவுன்சிலர்கூட இல்லை.
நீங்களாய்ச் சுயம்வரித்துக் கொண்டதுதானே
இந்த வாழ்க்கை, இந்த அரசு?
பின் என்ன?
எது இருந்தாலும் இருக்காவிட்டாலும்
உங்களிடம் இருக்கவேண்டியது:
அறியாமை அல்ல; சுயபோதம்,
நம்பிக்கையல்ல; செயல்பாடு.

இவையே உங்களை ரட்சிக்க
உங்களையே
உங்கள் ரட்சகனாக மாற்றவல்லது.

இவ்வளவையும் நான் சொல்வது
உங்களிடமிருந்து நான் தப்பித்துக்
கொள்வதற்கல்ல.
இப்போது எனக்கு என் முன்னுள்ள நிதர்சனம்;
உங்கள் அறியாமையும், நம்பிக்கையும்,
நப்பாசையுமே.

நான் தப்ப விரும்பாதவன்.
ரட்சகன் இல்லை எனினும்
ரட்சிப்பின் மின்னலைத் தொட்டுணர்ந்தவன்.
உங்கள் ஒவ்வொருவர் வாசல்விட்டிறங்கும்
போதும்

இக்கணக்கெடுப்போடு என்வேலை
முடிவுறாத ஏக்கத்தோடு செல்கிறேன்.

3.

பொறுப்பின் சுமை முழுவதையும் அயராது
ஏற்றபடி
ஒவ்வொரு வாயிலாய் ஏறி இறங்குகிறேன்.
நீயா? இங்கேயா? எனத் திடுக்கிடும்படி உன்
பிரசன்னம்.

நம் காதல்; அது ஒரு காலம்.
இன்று பிரிவற்ற நேசத்துள் நான் ததும்பி
நிற்கிறேன்.

சொல்;
உன் குடும்பத் தலைவரின் பெயர் என்ன?
எவற்றால் கட்டப்பட்டுள்ளது உன் வீடு?
அதன் சுவர், கூரை, தரை விபரமாக.
வாடகையா? சொந்தமா?
தண்ணீர் வசதி எப்படி?
குழாய் நீரா? கிணறா?
எரிபொருளாய் எதை உபயோகிக்கிறாய்?
எத்தனை அறைகள்?
மொத்தம் எத்தனைபேர் கொண்டது உன்
குடும்பம்?

என் பணிமுடித்து நான் நகரும்போதெல்லாம்
என்னுள் கனலும் துக்கம்;
கேள்விகளற்று
என் கண்களாலே குறித்துக் கொள்ளமுடியும்
உன் வீட்டின் சுவர், கூரை, தரை இவற்றின்
தரவிபரம்போல்
என் பார்வை கிரகித்த எல்லா விபரங்களுக்கும்
என்னிடம் படிவம் இல்லையே என்று.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பதிவு எண் : T N M S (S) 371

நட்புறவு பாலம்

# மேற்கோள் வாங்கலையோ?

மேற்கோள் வாங்கலையோ?
புள்ளிவிவரங்கள் வாங்கலையோ?

கடல் அளவு மேற்கோள்கள்
மலையளவு புள்ளிவிவரங்கள்
கூடைகூடையாய்க் கொட்டிக் கிடக்குது.
அம்பாரம் அம்பாரமாய்க் குவிந்து கிடக்குது.

எதனை நிறுவ விழைகின்றீர்?
இதோ உண்டு மேற்கோள்கள்.
எதனைச் சொல்ல விழைகின்றீர்?
எதற்கும் உண்டு விவரங்கள்.

அரசியல் சுதந்திரம் அடைந்து விட்டோமா?
அதற்கும் உண்டு மேற்கோள்கள்.

''அல்ல'' என்று சொல்பவர்க்கும்
ஆயிரம் உண்டு மேற்கோள்கள்.

சோவியத் சமூக ஏகாதிபத்தியம்,
அள்ளித் தருவோம் கட்டுரைகள்.
சீரழிந்த சோசலிசம் தான்,
எழுதித் தருவோம் கட்டுரைகள்.
இல்லை... யில்லை... சோசலிசம்தான்
இதற்கும் உண்டு கட்டுரைகள்.

நாடாளுமன்றப் பங்கெடுப்பா?
ஜெர்மன் கட்சிக்குச் சொன்னதென்ன?
அரைக்காலனிக்குப் பொருந்தாது.
அடடா... மாவோ உண்டதற்கு

நின்றால், குனிந்தால், நிமிர்ந்தால், நடந்தால்,
நியாயப் படுத்த மேற்கோள்கள்,
நிச்சயம் உண்டு தருகின்றோம்.

பேராசான் நடந்த நடை,
மாமேதை நின்ற விதம்,
மாவோதான் நிமிர்ந்த முறை.
மலிந்து கிடக்குது ஆதாரம்,
மறக்காமல் தருவோம் பூராவும்.

அன்றே சொன்னார் மாமேதை—
அணுவைத் துளைத்து ஏழ்கடல் புகுந்து
கண்டு பிடித்தோம் நாங்களிதை

அவரே சொன்னார் இன்னொன்றை—
எதற்கும் இருக்கட்டும் பத்திரமாய்
அதுவும் பயன்படும் பின்னொரு நாள்.

பீடங்களெல்லாம் மேற்கோளின்
பிம்பங்களாலே பெரிதாச்சு.

பீடம் நிலைக்க மேற்கோள்கள்.
பீடம் செழிக்க மேற்கோள்கள்.
பீடம் வளர்க்க மேற்கோள்கள்.

மேற்கோள் நமஹ.
புள்ளி விவரம் நமஹ.
பீடம் நமஹ.
பீடாதிபதி நமஹ.

காலமும் இடமும் சூழ்நிலையும்
கணக்கில் கொள்ளணும் மேற்கோள்கள்.
கானல் நீரின் பொய்மைகளைக்
களைந் தெறியணும் மேற்கோள்கள்.
உயிர்க்கும் இயங்கியற் செழுமையினை
உயர்த்திப் பிடிக்கணும் மேற்கோள்கள்.
உண்மைச் சுடரொளி காண்பதற்காய்
உறுதுணையாகணும் மேற்கோள்கள்

குழம்பிக் கிடக்குது வானம்தான்
குலைந்து தவிக்குது மேகங்கள்
அங்கும் இங்கும் காற்று அடித்து
அலைந்து திரியுது புவியெங்கும்.

வெடித்த நிலமும்
காய்ந்த புல்லும்
தீய்ந்த காற்றும்
திசை எங்கும்.

நிலத்தின் வேதனை புரியலையா?
நெஞ்சின் குமுறலை உணரலையா?

— புதிய ஜீவா

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்